உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 37 | காளயுக்தி - வைகாசி - 10—6—78 | இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## தில்லைத் திருப்பணிக்கு உதவ வாரீர்!

அவனன்றி அணுவும் அசையாது :

"தீர்த்தம் என்பது சிவகங்கையே
ஏத்தரும் தலம் எழிற்புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே"

என்பது குமரகுருபரர் வாக்கு. உலகமே விராட்புருஷ வடிவமாக அமைந்துள்ளது. அதில், சிதம்பரம் இருதயத் தானமாக விளங்குகிறது. இதயத் துடிப்பு இல்லாவிட்டால் உயிர்களுக்கு ஆட்டம் ஏது? ஓட்டம் ஏது? உலக புருஷனுடைய இயக்கமும் அப்படித்தான். இதயத்தாமரையாகிய சிதம்பரத்தில் விளங்குகின்ற நடராசப்பெருமானுடைய ஆனந்த தாண்டவ அசைவில்தான் உலகுயிர் இயக்கமே அமைந்திருக்கிறது. அவன் ஆடினால் அகிலமும் ஆடும். 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்பது திருமுறை. 'அவனன்றி

ஓரணுவும் அசையாது' என்பார் தாயுமானவர். இத்தலம் சைவத் திருமுறைகளைப் போற்றிப் பாதுகாத்த பெருமையுடையது. கோயில் என்ற பெயராலேயே குறிக்கப்பெறும் சிறப்பினது. சமயாசாரியர் நால்வர்களாலும் பாடப்பெற்றது.

**தில்லைவாழந்தணர் சிறப்பு :**

தேனினும் இனிய சைவத் திருமுறைகளைப் பாதுகாத்து வழங்கிய தில்லை அம்பலவனின் திருவடிகளில் அளவிலாப் பற்று வைத்து, தமிழ்நாட்டு மூவேந்தர்களும் குறிப்பாகப் பிற்காலச் சோழ மன்னர்களும் இத்தலத்தில் இயற்றிய அளவற்ற திருப்பணிகள் வரலாற்றுச் சிறப்புடையன. கல்வெட்டுக்களிலும் பொறிக்கப்பெற்றுள்ளன. தில்லைக் கூத்தனையே தம் வாழ்முதலாகக்கருதி நியமமாகப் பூசிக்கும் தில்லைவாழந்தணர்களின் பெருமை அளவில் அடங்காச் சிறப்பினது. சிவபெருமானே தில்லை மூவாயிரவருள் ஒருவர் என்பது மரபு. 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று திருவாரூர்த் தியாகேசப்பெருமானே அடியெடுத்துக்கொடுத்துத்தில்லை வாழந்தணர்களின் பெருமையையும் அடியார்களின் பெருமையையும் சுந்தரருக்கு அறிவித்தருளினர். அத்தகைய பெருமைக்கு உரியவர்கள் தில்லைத் தீட்சிதர்கள். அவர்கள் தில்லைத்திருக்கோயிலை அறக்கட்டளைகளைக்கொண்டே மிகச் சிறந்த முறையில் நித்திய நைமித்திக வழிபாடுகளை நிகழ்த்தி வருகின்றனர். அவர்கள் தங்களுக்கென்றே சட்டதிட்டங்களையும் விதிமுறைகளையும் வகுத்துக்கொண்டு திருக்கோயில் காரியங்களைச் செம்மையாகப் பரிபாலித்து வருகின்றனர்.

**பிள்ளை, தேசிகர் பெரும்பணி :**

இத்தகைய தில்லைப் பெருங்கோயில் காலப்பழமையால் மாபெருந் திருப்பணியை எதிர்நோக்கி நின்றது. திருப்பணிக்கு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, செயல்படத் தொடங்கியது. சில திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. அக்கமிட்டியில் ஆடூர் திரு. M. இரத்தின சபாபதிப்பிள்ளை தலைவராகவும், சிதம்பரம் திரு. S. இரத்தினசாமிச் செட்டியார் பொருளாளராகவும் பணியாற்றினர். 1955 ல் சபாநாயகர் திருக்கோயிலுக்கு மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அக்கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆடூர் திரு. M. இரத்தின சபாபதிப்பிள்ளை அவர்களால் ஆயிரக்கால் மண்டபம் திருப்பணி பெரும்பொருட் செலவில் பூர்த்திசெய்யப்பெற்றது. பிறகு வலிவலம் தேசிகர் அவர்களால் ஆயிரக்கால் மண்டபத்தின் முன்புறம் மிகப் பெரிய புதிய கருங்கல் மண்டபத் திருப்பணியும், ஆடூர் திரு. M. இரத்தினசபாபதிப் பிள்ளை அவர்கள் நிறுவிய அறக்கட்டளையின் மூலம் கனகசபையைச் சுற்றிலும் அமைந்துள்ள மண்டபத்தின் மேல்தளத் திருப்பணியும் பெரும் பொருட் செலவில் நிறைவேற்றப் பட்டன.

**ஒன்பது வகை உயர்பணி :**

இரண்டு ஆண்டுகளுக்கு முன் முழுமையான திருப்பணி செய்து குடமுழுக்கு நிகழ்த்த வேண்டும் என்றகருத்து தில்லைவாழந்தணர்கள் உள்ளத்திலும் தில்லைப் பெருமக்கள் உள்ளத்திலும் வளர்ந்தோங்கலாயிற்று. முன்னுள் அறநிலையத்துறை ஆணையர் திரு. M. K. பாலசுப்பிரமணியம் அவர்களின் ஈடுபாடும் ஒருங்கிணைந்தது. மிகப்பெரிய திருப்பணித்திட்டம்"(Master Plan) உருவாகியது. தமிழகத் திருமடங்களின் குருமகாசந்நிதானங்கள் அளித்த ஆதரவும் ஆசியும் திட்டத்திற்கு ஊக்கமளித்துச் சிறப்பாகச் செயல்படச் செய்தன. கமிட்டியின் புரவலர் செட்டிநாட்டரசர் திரு. டாக்டர் M A. முத்தையாசெட்டியார் அவர்களின் ஊக்கமும் உதவியும் துணை நின்றன. முன்னைய கமிட்டித் தலைவரின் திருமகனுர் கண்டிப்புமிக்க திரு. R. கனகசபைப் பிள்ளை தலைவராகவும் முன்னைய பொருளாளரின் திருமகனுர் நயம்மிக்க திரு. R. பாலசுப்பிரமணியஞ் செட்டியார் பொருளாளராகவும் இன்றைய திருப்பணிக் கமிட்டியிலும் இருந்து சிறந்த முறையில் பணிபுரிந்து வருவது தில்லைத் திருக்கோயிலின் திருப்பணியில் அக்குடும்பத்தினருக்குள்ள ஈடுபாட்டை நன்கு விளக்குகிறது. செயல்திறம்மிக்க திரு. G. வாகீசம் பிள்ளை கமிட்டியின் செயலாளராக இருந்து நல்ல முறையில் செயல்படுவதும் பாராட்டிற்குரியது. ஊக்கத்திலும் உதவியிலும் முன்னணியில் நிற்கும் பேரன்பர்கள் பலரும் கமிட்டியில் அங்கம் வகிக்கின்றனர். இப்பெரிய திருப்பணித்திட்டத்தை ஒன்பது பெரும் பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு திருப்பணியை முற்றுவித்துக் குடமுழுக்கு நிகழ்த்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**இரண்டரைலட்சம் :**

ரூபா ஐம்பது இலட்சத்திற்குமேல் தில்லைத் திருப்பணிக்குச் செலவாகும் என மதிப்பிடப்பெற்றிருக்கிறது. தமிழ்நாடு அரசு அறநிலையஇலாகா பலதவணைகளில் ரூபா இரண்டரை லட்சத்திற்குமேல் வழங்கியிருக்கிறது. கிழக்கிலும் வடக்கிலும் உள்ள இரண்டு இராஜகோபுரங்களின் திருப்பணியும் திருமதில் திருப்பணியும் விரைவாக நடைபெற்றுவருகின்றன. தில்லைத் திருக்கோயில் திருப்பணிக்குத் தமிழ் நாடு அரசும், உலக நிறுவனங்களும், நாட்டின் பல பகுதியிலும் வாழும் ஆயிரக்கணக்கான அன்பர்களும் பெருநிதி வழங்கி வருகிருர்கள். என்றுலும் பணி மிகப்பெரியது. இப்பணியில் சைவப்பேரன்பர்களும், பொதுமக்களும் இயன்றவாறெல்லாம் பெரும்பங்கேற்பது கடமையாகும்.

**மகளிர் மன்றம் கண்ட மண்டபம் :**

திருப்பணிக் கமிட்டியார் மிக விரைவில் இம்மாபெரும் திருப்பணியினை நிறைவுசெய்து கும்பாபிஷேகம் நடத்தப் பெருமுயற்சியோடு

செயல்பட்டு வருகின்றார்கள். இப்போது ஸ்ரீ நடராஜர் கோயில் நடனப்பத்தி முகப்புமண்டபத் திருப்பணியைச் சிதம்பரம் ஸ்ரீ சிவகாமசுந்தரி மகளிர் மன்றத்தார் எண்பதாயிரம்ரூபா செலவில் சிறப்புற நிறைவேற்றியுள்ளனர். அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் திரு. உ. சுப்பிரமணியம் ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமையில், தமிழ் நாடு அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் அவர்கள் ஆனித்திங்கள் 15-ம் நாள் (29—6—78) அம் மண்டபத்தைத் திறந்துவைக்கிறார்கள்.

அறநிலைய அமைச்சர் மாண்புமிகு. R. M. வீரப்பன் அவர்கள் கோடிக்கணக்கில் ஆலயத் திருப்பணிசெய்த நகரத்தார் குடிவழி வந்தவர்கள் ; எடுத்த எடுப்பிலேயே கோயில் சொத்து பிள்ளையில்லாத அனாதைச்சொத்தல்ல என்று சட்டமன்றத்திலேயேஅறிவித்தவர்கள்; அறநிலையங்களுக்கு வருவாய்பெருக வழிகண்டுவருபவர்கள். அற நிலையத்துறை ஆணையர் திரு. உ. சுப்பிரமணியம் அவர்கள் கோயில்கள்மிக்க தஞ்சைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ; பாம்பறியும் பாம்பினகால் என்பதுபோல் கோயில்களின் தற்கால நிலைமையை நன்கு அறிந்தவர்கள். ஆகவே நிலைமையை அறிந்த அமைச்சரும் ஆணையரும் தில்லைத் திருப்பணிக்கு மேலும் பேருதவி செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

**முதல் குடமுழுக்கு :**

கமிட்டியின் உபதலைவர் திரு. N. M. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் முக்குறுணி விநாயகர் திருக்கோயில் திருப்பணியை ரூபா இருபத்தையாயிரம் செலவில் செய்துவருகிறார்கள். வருகிற ஆவணி மாதத்தில் மூலாதாரக் கணபதிக்கு முதல் குடமுழுக்கு நிகழ இருக் கிறது. மதுரை திரு. கருமுத்து. எஸ். சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள்,திருமூலநாதர் உமையபார்வதிதிருக்கோயில் திருப்பணியைத் தம்பொறுப்பில் செய்ய முன்வந்துள்ளார்கள். இப்படி ஒவ்வொரு வரும் தாமாகவே சில பகுதிகளைத் திருப்பணிசெய்விக்க எண்ணி யுள்ளனர். அனைவரும் இம்மாபெரும் பணியில் பங்குகொண்டு பயன் பெறவேண்டுமென்பதால் இவ்வாறு ஒன்பதுவகையாகப் பிரித்து ஒரு வரையறைசெய்யப்பட்டுள்ளது. பேரன்பர்கள் தில்லைத் திருப்பணியில் பங்குகொண்டு இம்மை மறுமை இன்பம் பெற்று உய்வார்களாக.

" வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கும் முடிச்சென்னி
வாழிஅவன் சீர்பாடும் வாய். "

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# *ஆசியுரை

## தாயுமானவரது உண்மை உள்ளம்

" புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும் "

என்ற வள்ளுவர் வாக்கின்படி, ஒருவரது உள்ளத்தின் தூய்மையை அவருக்கு உண்மையின்மேல் உள்ள ஆர்வத்தைக்கொண்டே அறிய முடிகிறது. 'உண்மை' என்பது சிறப்பாக அகமும், புறமும் ஒத்திருத்தலேயாகும். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல் 'வஞ்சனை' என்றும், 'படிறு' என்றும் இழித்துச் சொல்லப்படும். இதனை 'நடிப்பு' என்றும் சிலசமயம் கூறுவார்கள்.

தாயுமானவரது உள்ளத் தூய்மை அவரது உண்மை ஒழுக்கத்தின் வைத்து நன்கு அறியப்படுகின்றது. எண்ணமும், சொல்லும் ஒன்றுபட்டிருத்தலில் தமக்குள்ள ஆர்வத்தையும், அவை வேறுபட்டிருப்பதில் தமக்குள்ள வெறுப்பையும் அவர் பின்வருமாறு வெளியிடுகிறார்.

" உள்ளபடி ஒன்றை உரைக்கின் அவர்க்குள்ளுறவாய்க்
கள்ளமின்றி அன்பாய்க் களிப்பேன் பராபரமே "

" உள்ளம்அறி யாதொருவர் ஒன்றைஉன்னிப் பேசில்ஐயோ
துள்ளியிளங் கன்றாய்த் துடிப்பேன் பராபரமே.' "

---

* அகில இந்திய வானொலியில் திருச்சி நிலயத்திலிருந்து 'நெறி விளக்கம்' என்ற தலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி 10—2—1978 அன்று வழங்கியதைத் தழுவியது. வானொலி நிலயத்தாரின் அனுமதியுடன் வெளியிடப்பெற்றது.

உண்மை உள்ளம் உடையவர்களுக்குத்தான் தாங்கள் சொல்லும் சொற்களும், செய்யும் செயல்களும் நல்லனவாய் இருப்பினும் தங்கள் உள்ளம் இன்னும் அவ்வளவாக அவைகளில் தோயவில்லை என்றும், அதனால் அந்தச் சொற்களும், செயல்களும் சில நாடகங்கள்போல உள்ளன என்றும் தோன்றும்.

" நாடகத்தால் உன் அடியார் போல்நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன் "

என்ற மணிவாசகர் வாக்கு இதற்குச் சான்றாகும். மணிவாசகர்க்கு உள்ளம் அன்பினால் நெக்கு நெக்குருகினாலும், அன்புக் கண்ணீர் அருவிபோலச் சொரிந்தாலும், 'உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகவேண்டும்; உடம்பெல்லாம் கண்ணாய் வெள்ளம் பாயவேண்டும்' என்று விரும்புகின்ற அவருக்குத் தமது உள்ள உருக்கமும், கண்ணீர்ப் பெருக்கும் வெறும் நாடகமாய்த் தோன்றின. அதனால், 'எனது நெஞ்சம் கல்; கண் மரக்கண்' என்று கூறினார்.

தாயுமானவரது நிலையும் அத்தகையதே. அதனைப் பின்வரும் பகுதியால் அறியலாம்.

" கண்ணாரா நீர்மல்கி உள்ளம்நெக் குருகாத
கள்ளனேன் ஆனாலுமோ
கைகுவித் தாடியும், பாடியும், விடாமலே
கண்பனித் தாரை காட்டி
அண்ணா! பரஞ்சோதி! அப்பா! உனக்கடிமை
யான் எனவும் மேல்எழுந்த
அன்பாகி நாடகம் நடித்ததோ குறைவில்லை
அகிலமும் சிறிதறியுமேல்
தண்ணாரும் நின்னதருள் அறியாத தல்லவே "

என்று முறையிடுகின்றார். ஆனால், உண்மையில் அவர் கள்ளத்தனம் உடையவரா? அவருடைய சொல்லும், செயலும் நாடகங்களா? அல்ல அல்ல. சில லட்சரூபா சேர்த்தவன் கோடிரூபா உடையவனைப் பார்த்துத் தன்னை 'ஏழை' என்று எண்ணுகின்றான். ஒரு கோடிரூபா சேர்த்தவன் பலகோடி ரூபா உடையவனைப் பார்த்துத் தன்னை 'ஏழை' என்று எண்ணுகின்றான். அதேநிலைதான் அருள் வேட்கையிலும் உள்ளது. அதனால்தான் இத்தகைய வாக்குகள் தோன்றுகின்றன.

தாயுமானவரது வரலாற்றை நோக்குவோமேயானால், அவருக்கு இத்தனை அருள்வேட்கை தோன்றியது வியப்பைத் தருகின்றது.

தாயுமானவர் 'வேதாரண்ணியம்' என்னும் திருமறைக்காட்டில் வாழ்ந்த கேடிலியப்பப் பிள்ளை என்னும் பெருமகனுர்க்கு அவர்தம் தவத்தால் இரண்டாம் மகனுராகத் தோன்றினுர். முதல் மகனுர் 'சிவசிதம்பரம்' என்பவரைக் கேடிலியப்பப் பிள்ளை தம் தமையனுர்க்குச் சுவீகாரமாகக் கொடுத்துவிட்டார். பின்பு திருச்சிராப் பள்ளியை அக்காலத்தில் ஆண்ட முத்துகிருஷ்ண நாயக்கரது அழைப்பிற்கு இணங்கி அங்குச்சென்று தலைமைக் கணக்கு அலுவல் பார்த்துவந்த அவருக்கு அடுத்த மகப்பேறின்மையால், திருச்சிராப் பள்ளித் தாயுமானப்பெருமானைவேண்டி அவர் அருளால் பெற்ற தம் இரண்டாவது மகனுர்க்கு அப்பெருமானது திருப்பெயரையே இட்டார். தந்தையாருக்குப்பின் அவரது அலுவலைப் பார்த்துவந்த தாயுமானவர் ஆன்மலாபத்தைப் பெறுவதிலேயே விருப்பமுடையவராக இருந்தார். திருச்சிராப்பள்ளி மௌனமடத்தைப் பரிபாலித்து வந்த மௌன குருவிடம் தம் கருத்தைத் தெரிவித்துத் தீட்சையும் உபதேசமும் பெற்றுச் சீடராயினுர்.

அவர் அலுவல் பார்த்த காலத்தில் இருந்த அரசியின் தகாத அன்பினுல் தானே கிடைக்க இருந்த பொருள் வசதியையும், இன்பத்தையும் துச்சமாகத் துறந்து, அலுவலையேவிட்டுத் தம் சொந்த ஊராகிய வேதாரணியத்திற்குச் 'சென்றுவிட்டார் என்ருல், அவரது உள்ளத் தூய்மையை என்னென்று உரைப்பது. அத்தகைய பெரியார் ஒருவரை அண்மைக் காலத்தில் தமிழகம் பெற்றிருந்தது என்பதை நினைத்தால் எத்தகைய தமிழ் மகனின் உள்ளமும் உருகாது இராது.

வேதாரணியம் சென்றபின் இவருக்கு இவர்தம் தமையனுர் திருமணம் செய்வித்தார். தம் குரு ஆணைப்படி அதனை இவர் ஏற்று வாழ்ந்தார். ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. இதையும் தாயுமானவர் இறைவனது திருவிளையாட்டாகவே கருதினுர் என்பது பின் வரும் பாடற்பகுதியால் தெரிகின்றது.

"பத்தி யாய் நெடிது நம்பும் என்னை ஒரு
மையல்தந் தகில மாயையைப்
பாரு பார் என நடத்த வந்த தென
பாரதத் திலும் இதுள்ளதோ?
... ... ... ... ... ... ... ...
என் சித்தம் இப்படி மயங்குமோ? அருளை
நம்பினேர்கள் பெறு பேறிதோ?"

என்கிருர்.

அடிகள் இறைவன் திருவருள் ஒன்றையே விரும்பி அதனை, எடுத்த தேகம் விழுமுன்னே கைவரப் பெறல் வேண்டும் என்ற அதி தீவிரமான அருள் வேட்கையை உடையவராய் இருந்தனர்

என்பது ஒன்றே அவ்வருடைய பாடல்களில் மிகப் பலவான இடங்களில் காணப்படுவது.

" இனியே தெமக்குனருள் வருமோ எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம் ஐயோ !
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பர் என்று
எண்ணவோ திடமில்லையே
அநியாய மாய்இந்த உடலைநான் என்றுவரும்
அந்தகற் காளாகவோ ?
ஆடித் திரிந்துநான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதல் நன்றோ "

எனவும்,

" காய், இலை, உதிர்ந்த கனி, சருகு, புனல் மண்டிய
கடும்பசி தனக்கடைத்தும்
கார்வரையின் முழையில் கருங்கல்போல் அசையாது
கண்மூடி நெடிதிருந்தும்
தீயினிடை வைகியும் தோயமதில் மூழ்கியும்"

இப்படியெல்லாம் பலவாறு வருந்தி,

அறிஞர்
ஆயும் மறை முடிவான அருள்நாடினர் அடிமை
அகிலத்தை நாடல் முறையோ ".

எனவும் வருவன போல்பவை அடிகளது உள்ள நிலையை அங்ஙனமே படம் பிடித்துக்காட்டும். அடிகள் தமது வடமொழி தென்மொழி கல்விப் பெருக்கினால் பெருமையும், பொருளும் பிறவும் அடைய விரும்பவில்லை. அக்கல்வியின் பயனாக ஆண்டவனது அருள் ஒன்றையே பெற விரும்பினர் என்பது மேற்கண்ட பகுதியால் விளங்கும்.

இறைவனோடு இரண்டறக் கலத்தலாகிய சாயுச்சியசுத்தாத்வைத பரமுத்தியில் தமக்கு உள்ள வேட்கையால் பித்துக்கொண்டவர் போல இவர் உப்பைத் தண்ணீரிலே கரைத்துப் பார்ப்பாராம். கற்பூரத்தை ஏற்றிவைத்து அது தீயால் எரிந்து மறைந்துபோவதைப் பார்ப்பாராம். இத்தகைய பரமுத்திக்கு வழிகாட்ட, " சீகாழித்துரையே சிவன் அப்பர என்றன் அருட் செல்வத் தேவே, நாவலோய், வாதவூர்த் தேவே, திருமூலத் தேவே, அருணகிரியே " என்று இதுபோலப் பல பெரியார்களைக் கூவி அழைப்பாராம். இத்தகைய உண்மை உள்ளம் படைத்தவரது பாடல்களைப் படித்தாவது நாம் அருள்வேட்கை உடையவர்களாதல் வேண்டும்.

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில்




ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
பக்தர்களுடன் பட்டணப்பிரவேசத்திற்கு எழுந்தருளுதல்



பட்டணப்பிரவேசத்தில்
திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகளும்
ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களும்.

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடன்
சமயப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட பயிற்சியாளர்கள்

தருமையாதீனத்தில் 6—6—1978 அன்று



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை
புதுவைமாநில முதல்வர் மாண்புமிகு S. இராமசாமி அவர்கள்
குடும்பத்தினருடன் தரிசித்தபோது பொன்னுடைபோர்த்தி
ஆசியருளல்

# மேலைத் திருக்காட்டுப்பள்ளி - திருவாலம்பொழில் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்
**வித்துவான். வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.**

'பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யாதளிக்கும் புனல்நாடு' என்று தெய்வச் சேக்கிழார் பெருமானுல் போற்றி உரைக்கப்பெற்ற சோழவளநாட்டில் காவிரியின் தென்கரையில் விளங்குவன இத் தலங்கள். தஞ்சையிலிருந்து பேருந்துகளின் மூலம் இவ்விரு தலங்களையும் எளிதில் அடையலாம்.

## மேலைத்திருக்காட்டுப்பள்ளி

இறைவன் உறையும் திருக்கோயில்களைப் பள்ளிஎன்றுகுறித்தனர் ஆன்ருேர். இத்தகைய பள்ளி என்ற பெயருடைய தலங்கள் பல வற்றைத் தொகுத்துரைக்கின்ற திருநாவுக்கரசுசுவாமிகள்,

" பொருப்பள்ளி வரைவில்லாப் புரமூன் றெய்து
புலந்தழியச் சலந்தரனைப் பிளந்தான் பொற்சக்
கரப்பள்ளி திருக்காட்டுப் பள்ளி கள்ளார்
கமழ்கொல்லி யறைப்பள்ளி கலவஞ்சாரல்
சிரப்பள்ளி சிவப்பள்ளி செம்பொன் பள்ளி
செழுநனி பள்ளிதவப் பள்ளிசீரார்
பரப்பள்ளி யென்றென்று பகர்வோ ரெல்லாம்
பரலோகத் தினிதாகப் பாலிப்பாரே."

என்று அருளிச்செய்கின்ருர். சோழவளநாட்டில் காட்டுப்பள்ளி என்ற பெயருடைய பாடல் பெற்ற தலங்கள் இரண்டு உள்ளன. காவிரியின் வடகரையில் திருவெண்காட்டிற்கு அருகில் உள்ளதலம் கீழைத் திருக்காட்டுப்பள்ளி எனப்பெறும். இத்தலம் மேற்றிசையில் உள்ள தாதலின் மேலைத்திருக்காட்டுப்பள்ளி என வழங்கப்பெறும்.

திருக்காட்டுப்பள்ளி, திருச்சிராப்பள்ளி தஞ்சை இருப்புப் பாதையில் பூதலூர்ப் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 8 கி. மீ. தூரத்தில் விளங்குகிறது. திருக்கண்டியூர் திருவையாறு இத்தலங் களிலிருந்து பேருந்து மூலமாக இத்தலத்தை அடையலாம். கந்தர்வ

கோட்டையிலிருந்தும் கல்லணையிலிருந்தும் இவ்வூரை அடையப் பேருந்துகள் உள்ளன.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றும் அப்பர்பாடிய பதிகம் ஒன்றும் ஆகிய இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன. சுவாமி பெயர் அருள்மிகு தியாடியப்பர். வடமொழியில் அக்னீஸ்வரர் எனப்பெறுகிறார். அம்பிகை பெயர் அருள்மிகு அழகமர் நாயகி. வடமொழியில் சௌந்தரநாயகி எனப்பெறுகிறார். தீர்த்தம் - அக்கினிதீர்த்தம் ; காவிரி. தலமரம் - வன்னி ; வில்வம்.

**கோயிலமைப்பு:**

பழையகாலத்தில் கோட்டை கொத்தளங்களோடு கூடிய பெரிய நகரமாக இவ்வூர் விளங்கியிருந்தது. கோயில் ஊரின் நடுவே பேருந்து நிலையத்துக்கு அண்மையில் கிழக்குநோக்கி உள்ளது. ஏழு நிலைகளோடு கூடிய இராஜகோபுரம் புத்தம் புதிய சுதைச் சிற்பங்களோடு திருப்பணி செய்யப் பெற்றுள்ளது. உள்ளே நுழைந்ததும் விநாயகர் காட்சியளிக்கிறார். கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகியன நம் கண்களுக்கு இலக்காகின்றன. சுவாமி கிழக்குநோக்கியும் அம்பாள் சந்நிதி முதற்பிராகாரத்தில் தெற்குநோக்கியும் உள்ளன. அம்மன் சந்நிதிக்கு எதிரே வடக்குமுகமாய் நர்த்தனவிநாயகர் விளங்குகிறார். இரண்டாம் கோபுரத்தைக் கடந்து உள்மண்டபத்தை அடைந்தால் வலதுபுறம் நடராசர் சபாமண்டபம். மண்டபத்தின் கீழ்ப்புறமேடையில் பைரவர், சமயாசாரியர் திருவுருவங்கள் உள்ளன. முன் மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் சுவாமி சந்நிதியை அடையலாம். சுவாமி எழுந்தருளியுள்ள இடம் மிகப் பள்ளமாக உள்ளது. மகாமண்டபத்தில் உற்சவ விக்கிரகங்கள் உள்ளன. உட்பிராகாரத்தில் வலம்புரிவிநாயகர், திருமால், இலக்குமி, தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், முருகன், துர்க்கை, சண்டேசுவரர் திருவுருவங்கள் உள்ளன.

திருமால் பிரமன் சூரியன் அக்கினி பகீரதன் உறையூர்ச்சோழனின் மூத்தமனைவி ஆகியோர் வழிபட்டு அருள்பெற்றுள்ளனர்.

**புராணவரலாறு:**

ஒருசமயம் இந்திரன் முதலிய தேவர்கள் இத்தலத்திற்கு வந்து இறைவனையும் இறைவியையும் வழிபட்டு மகிழ்வுற்றனர். அப்போது தேவர்கட்கு முகம்போல் விளங்கிய அக்கினிதேவன் உலகில் எல்லாப் பொருளையும் அழிப்பதால் தனக்கு ஏற்படும்பாவத்தைப் போக்கிக் கொள்ள இத்தலத்திறைவனைப் பூசைகள் பலவும் புரிந்து வழிபட்டான். இறைவன் அக்னிதேவனுக்குக் காட்சியளித்து 'உன்

பெயரால் தீர்த்தமொன்றமைத்து அதில்நீராடி நம்மை வழிபட்டுவருக அருள்புரிவோம்' என்றருளினர். அக்கினிதேவன் அவ்வாறே வழிபட்டுவந்தான். இறைவன் அருட்காட்சி வழங்கி அக்கினி தேவனுக்கு அருள்புரிந்தார். அக்கினி வழிபட்ட கோயில் அக்னீச்சுவரம் எனப்பெற்றது. அக்கினிக்கு அருள்புரிந்த காரணத்தால் இறைவன் அக்னீச்சுவரன் எனப்பெயர்பெற்றார். அக்கினிதீர்த்தம் இன்று கிணறு வடிவில் உள்ளது.

" அக்கினியீச் சுரமென்றோர் பெயர்பெற்ற தக்கோயில்
அக்கினியீச் சுரனென்றோர் பெயர்பெற்றார் அங்கணனும்
அக்கினிமா தீர்த்தமென்றோர் பெயர்பெற்ற தத்தீர்த்தம்
அக்கினிய தெனப்புனிவார்க்கு அதிவிருப்பம் அத்தலமே"

என்பது இத்தலத்தின் சிறப்பை விளக்கும் பாடலாகும். அக்கினி தீர்த்தத்தில் கார்த்திகைஞாயிறு, மாசிமகம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் ஆகியநாட்களில் நீராடி வழிபடுவோர் எல்லா நலன்களும் எய்துவர்.

சிவபெருமானுக்குச் சொந்தமான உறையூர் நந்தவனத்தில் பணியாளன் கொய்துவந்த செவ்வந்திமலர்களை மன்னன் தன்மனைவியர்க்கு அளித்தான். மூத்தமனைவி அம்மலரைச் சிவபெருமானுக்கு அணிவித்து வந்தாள். இளையவள் தான் சூடி மகிழ்ந்தாள். உறையூர் மண்மாரியால் அழிந்தது. மூத்தாள் இருந்த திருக்காட்டுப் பள்ளி மட்டும் அழியாமல் பிழைத்தது எனக் கூறுவர்.

**திருவிழா:**

நான்கு கால நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்திரம் பெருவிழா. பெருமான் பங்குனி உத்திரத்தில் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளுவார். இவ்விழா இவ்வூருக்குத் தனிச் சிறப்புத் தரும் பெருவிழாவாகும்.

**சூழ உள்ள தலங்கள்:**

திருக்கானூர், திருஆலம்பொழில், அன்பிலாலந்துறை, திருமழபாடி, திருவையாறு, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி முதலிய தலங்கள் இத்தலத்தைச் சூழ உள்ளனவாகும்.

**கல்வெட்டுக்கள்:**

முதலாம் ஆதித்தசோழன் காலத்துத் திருப்பணி பெற்றது இத்திருக்கோயில். பள்ளி என்ற சொல்லைக்கொண்டு ஒருகாலத்தில்

இவ்வூர் சமணர்கள் வாழ்ந்த இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். அதற்கேற்றபடி 24 - ஆம் சைன தீர்த்தங்கரரின் சிலை இவ்வூரில் கிடைத்துள்ளது.

சோழநாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் கல்வெட்டுஒன்றும் கோனேரின்மை கொண்டான் கல்வெட்டு ஒன்றும் ஆக இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்விரு கல்வெட்டுக்களிலும் அம்பாள் பெயர் அழகமர்மங்கை எனக் குறிக்கப்படுகின்றது. அம்பாள் கோயில் சுந்தரபாண்டியன் அரியணையேறிய ஏழாம் ஆண்டில் (கி. பி. 1216 ல்) திருப்பணி செய்யப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

**நூல்கள்:**

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடியருளிய இரண்டு திருப்பதிகங்களைப் பெற்றது இத்தலம். வெள்ளியம்பலவாணமுனிவரின் சீடராகிய சிவப்பிரகாசர் உப்புவிற்கும் ஒருபெண்ணின் புலமையையும் தகுதியையும் அறிந்து அப்பெண்ணைப் பார்த்து,

> " நிறைய உளதோ வெளிதோ கொளுவேம்
> பிறையை முடிக்கணிந்த பெம்மான்—உறையும்
> திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
> கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு "

எனப் பாடியருள அப்பெண்,

> " தென்னோங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமான்
> பொன்னோங்கு சேவடியைப் போற்றினேம்—அன்னோன்
> திருக்கூட்டம் அத்தனைக்கும் தெண்டனிட்டோம் தீராக்
> கருக்கூட்டம் போக்கினேம் காண் "

என் மறுமொழிகூறிப் பணிந்து நற்கதி பெற்றாள் எனக்கூறுவர். இத்தலத்தைப்பற்றிய விரிவான வரலாறு தேவஸ்தானத்தில் வெளியிடப்பெற்றுள்ளது.

## திருவாலம்பொழில்

தஞ்சைமாவட்டத்தில் திருப்பூந்துருத்திக்கு மேற்கே 2 கி. மீட்டர் தூரத்தில் காவிரியின் தென்கரையில் உள்ளது இத்திருத்தலம். திருக்கண்டியூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளி செல்லும் பெருந்துச்சாலையில் விளங்குகிறது.

இறைவர் திருப்பெயர் :- அருள்மிகு ஆத்மநாதேசுவரர்.
இறைவியாரின் திருப்பெயர் :- அருள்மிகு ஞானம்பிகை.

**கோயிலமைப்பு :**

திருக்கண்டியூர் - திருக்காட்டுப்பள்ளி நெடுஞ்சாலையில் ஊர் அமைந்துள்ளது. சிறிய கிராமம். அருள்மிகு வடமூலேஸ்வரர் கோயில் எனக் கோயில் வழங்கப்படுகிறது. கோயிலுக்கு எதிரே திருக்குளம் அமைந்துள்ளது. கரையில் விநாயகர் கோயில் கோயிலை நோக்கி உள்ளது. ஐந்துநிலைக்கோபுரம் கோயிலுக்குஅணிசெய்கிறது. உள்ளே நுழைந்தவுடன் தலவிநாயகரைத் தரிசித்துக்கொண்டு வலம் வரலாம். முருகனை வழிபட்டுக்கொண்டு வடக்குப் பிராகாரத்தில் துர்க்கையையும் தெற்குப்பிராகாரத்தில் தக்ஷிணாமூர்த்தியையும் வழிபட்டுக்கொண்டே இறைவன் சந்நிதியை அடைகிறோம். முதலில் மகாமண்டபம். இங்கு நவக்கிரகங்கள் உள்ளன. அம்பாள் சந்நிதியை இங்கே தரிசிக்கலாம். விநாயகரை வழிபட்டுக்கொண்டு அர்த்த மண்டபத்தை அடைந்தால் நால்வரை வழிபடலாம். இறைவன் சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. அருள்மிகு வடமூலேஸ்வரர் ஆத்மநாதர் என்ற பெயர்களோடு இறைவன் இங்கு விளக்கமுற்றுத் திகழ்கின்றார். வழிபட்டுக்கொண்டு அம்பாள் சந்நிதியை அடைந்து ஞானம்பிகையைத் தரிசித்துக்கொண்டு மீண்டுவரலாம்.

**சம்பந்தர் மேடு :**

திருவாலம்பொழில் தென்பரம்பைக் குடியைச் சேர்ந்தது எனத் தேவாரத்தில் குறிக்கப்படுகிறது. பிரம்பை இன்று பிரம்பூர் என வழங்கப்படுகிறது. வெள்ளாளர் வாழ்ந்துவரும் இப் பிரம்பூர் வெள்ளாம் பரம்பூர் என வழங்கப்படுகிறது. ஆலம்பொழிலிருந்து தெற்கே 2 கி. மீட்டர் அளவில் விளங்கும் இவ்வூருக்கு அருகில் சம்பந்தர்மேடு என்று வழங்கும் இடம் ஒன்று காணப்படுகிறது. திருஞானசம்பந்தர் மதுரைமாநகரம் சென்று பாண்டிய நாட்டில் சைவ சமய ஸ்தாபனம்புரிந்து மீண்டு எழுந்தருளியபோது அப்பரைக் காணும் வேட்கையோடு திருப்பூந்துருத்திக்கு எழுந்தருளினர் ; திருஞானசம்பந்தர் எழுந்தருளிவரும் செய்தி கேட்ட அப்பர் அவர் எழுந்தருளிவந்த பல்லக்கைச் சுமந்துவந்தபோது அப்பர் எங்குற்றார் என்று திருஞானசம்பந்தர்கேட்க அடியேன் நும் சிவிகையைத்தாங்கி வரும் பெரும்பேறுபெற்று இங்குற்றேன்" என்று அப்பர் சுவாமிகள் கூறிய இடம் 'சம்பந்தர்மேடு' என்று வழங்கப்படுகிறது. திருப்பூந்துருத்திக்குத்தெற்கே 5 கி. மீ. தூரத்தில் உள்ளது. இவ்விடத்தில் திருஞானசம்பந்தருக்கும் அப்பருக்கும் தனித்தனிக் கோயில்கள் உள்ளன. வெள்ளாம்பரம்பூரிலும் அழகிய சிவாலயம் ஒன்று உள்ளது

சுவாமி பெயர் அருள்மிகு ஏகாம்பரநாதர். அம்பாள் பெயர் அருள்மிகு காமாட்சி.

**தலச் சிறப்பு :**

இக்கோயில் மேற்குநோக்கிய சந்நிதியை உடையது. காசிபர் நாகர் அஷ்டவசுக்கள் இவர்களால் வழிபடப்பெற்றது இத்தலம். தீர்த்தங்கள் - திருப்பாற்குளம், காவிரிநதி. தலவிருக்ஷம் - ஆலமரம்.

**கல்வெட்டு :**

இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் மிகவும் சிதைந்துள்ளன. இதில் பரம்பைக்குடி திருவாலம்பொழில் உடைய மகாதேவர் என இத்தலப் பெருமான் குறிப்பிடப்பெறுகிறார்.இவ்வூர்த் திருத்தாண்டகத்திலும் அப்பரடிகள் 'தென்பரம்பைக் குடியின்மேய திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே' எனக் கூறியருளினார்.

---

## அன்னை அருள்மாலை

திருமுறைக் கலாநிதி

**வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.**

வண்டுபாடும் பொய்கைசூழ் பூந்துருத்தியில்
வசிக்கும்அழ கார்ந்தஅம்மை
வானவர்வ லஞ்செயும் கண்டியூர் கொண்டுநல்
வர்மருள்மங் களநாயகி
தொண்டுசெய் வார்க்குநற் றுணையாகும் சோற்றுத்
துறைஒப்பி லாஅம்மையே
துன்பம்நீக் கிடும்வேதி குடிமங்கை யர்க்கரசி
தொல்பதிதென் குடித்திட்டையே
எண்டிசை புகழுலக நாயகி புள்ளமங்கை
எழிலார்ல் லியங்கோதையே
எக்காலமும் அடியர் ஏத்துசக் கரப்பள்ளி
ஈறிலாத் தேவநாயகி
பண்டைவினை நீக்கும்கருகாவூர் கரும்பனையாள்
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம்அடைந்தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (9)

# "குருலிங்க சங்கமம்"*

"சித்தாந்தப் புலவர்மணி",

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.

**முன்னுரை :**

எல்லாம்வல்ல பேரருட்பெருங்கடவுளாகிய சிவபெருமான், குரு - இலிங்கம் - சங்கமம் என்னும் மூவகை வடிவங்களில், உயிர்களை யெல்லாம் ஆட்கொண்டு காத்தருள்கின்றான் என்று, சைவ சமய நூல்கள் சாற்றுகின்றன. இம்மூவகை வடிவங்களிலும் சிவபெருமான் திகழ்தலைச் சீகாழிக்கோயிலில், நாம் கண்டுணரலாம். சீகாழிக்கோயி லில், இலிங்கவடிவில் மூலத்தானத்திலுள்ள பிரமலிங்கேசுவரரும், குரு வடிவில் கட்டுமலையில் உள்ள தோணியப்பரும், சங்கமர் எனப் படும் அடியார் வடிவில் சட்டைநாதரும் எழுந்தருளி விளங்கு கின்றனர்.

**மும்மலங்களும், முக்கரணங்களும் :**

இலிங்கம் குரு சங்கமம் என்னும் மூவகை வடிவங்களும், இறைவ னுக்கு முறையே மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களாக அமைந்து நிகழ்கின்றன. இலிங்க வடிவம் இறைவனுக்கு மனமாகவும், குருவடிவம் வாக்காகவும், சங்கம வடிவம் உடம்பாகவும் விளங்குகின் றது. மனமாகிய சிவலிங்க வடிவம், உயிர்களின் ஆணவ மலத்தைப் போக்குகின்றது. வாக்காகிய குரு வடிவம் மாயா மலத்தை நீக்கு கின்றது. உடம்பாகிய சங்கம வடிவம் நல்வினை தீவினைகளாகிய இருவினைகளையும் அகற்றுகின்றது. இங்ஙனம் உயிர்களின் ஆணவம் மாயை கன்மங்களாகிய மும்மலங்களையும் அழித்தொழிப்பதற்கே, இறைவன் குருலிங்கசங்கமம் ஆகிய வடிவங்கள் கொண்டருள்கிறான். இம்மூன்றனுலன்றி, வேறுவகைகளில் உயிர்களைப் பற்றியுள்ள மும் மலங்கள் எளிதில் அழியமாட்டா. இக்கருத்தினைப் பின்வரும் பாடல் தெளிவுற விளக்குதல் காணலாம்

"ஏத்தரிய லிங்ககுரு சங்க மந்தான் ;
ஏகபரன்மனம் வாக்குக் காயம் ஆகும் ;
வாய்த்தமனம் சிவலிங்கம் ஆகும் ; மூல
மலம்அகற்றும் ; குருவருள்சேர் வாக்கு, மாயை

---

* தருமையாதீனக் குருபூசை விழாவில், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் தலைவர், **வித்துவான் ஸ்ரீமத், காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களின் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது (27—5—78).

தீர்த்தருளும் ; சங்கமமாம் **மேனி** தன்னால்
தீராத இருவினையாம் கன்மம் நீக்கும் ;
ஆர்த்தமலம் மூன்றகற்றும் குறியீ தாகும் ;
அல்லதுமற் றென்றாலும் அகன்றி டாதே"

**பசுவின் முகமும், மடியும் :**

குரு லிங்க சங்கம வடிவங்களின் சிறப்பினைப் பின்வருமாறும் உருவகம் செய்து நூல்கள் உணர்த்துகின்றன. சிவபெருமான் ஒரு சிறந்த பசுவைப்போன்றவன். அவன் நமக்குத் திருவருள் ஆகிய தீம்பாலைப் பொழிந்தருள்கின்றான். அதனால் சிவபிரானை ஒருவகையில் நாம் ஒரு சிறந்த பசுவுக்கு ஒப்பிடலாம். சிவபெருமானாகிய சிறந்த பசுவுக்கு மடி இலிங்கம் ; உடம்பு குரு ; முகம் அல்லது வாய் சங்கமம். பசுவின் மடிதான் நமக்குப் பாலைத்தருகின்றது. அதனால் நாம் மடியினிடம் சென்று புல்லையுண்ணக்கொடுத்தால் மடி அதனை ஏற்றுக் கொள்வதில்லை. அவ்வண்ணமே பசுவின் உடம்பில் உள்ள வேறு எந்தப்பகுதியும் புல்லை ஏற்றுக்கொண்டு பாலைத்தரமாட்டா. பசுவின் முகம் அல்லது வாயில் புல்லைக்கொடுத்தால், அஃது அதனை ஏற்று உண்டு, உடம்பு முழுவதற்கும் நல்ல வளத்தைப் பெருக்கி, மடியின் வாயிலாக நமக்குப் பால் சுரந்து, கிடைக்கச்செய்கின்றது. இதனால் நாம் ஒரு பேருண்மையை உணர்கின்றோம். இலிங்கத்திற்கோ, குருவுக்கோ நாம் நேரே வழிபாடுசெய்ய முற்படாமல், சங்கமர்களாகிய அடியார்களின் வாயிலாக, அவர்களின் துணைகொண்டு நாம் குருவையும், இலிங்கத்தையும் அணுகுவோமாயின், நாம் எளிதாகவும் இனிதாகவும் இறைவனின் திருவருளைப் பெறலாம். அடியவர்களின் வழிபாட்டால் குரு வழிபாடும், குரு வழிபாட்டால் இலிங்க வழிபாடும் படிமுறையே சிறப்புற்றுப் பெரும்பயன் அளிக்கின்றன. இதனைப் பின் வரும் சிறந்த பாடல் தெளிவுற விளக்குகின்றது.

"கோதனத்தின் முலை**இலிங்கம்** ; குருவாம் மேனி ;
கூறியசங் கமம் முகமாம் ; குலவும் கீரம்
போதம்;முலை பொழிந்திடுமென்று அதற்கன் பாகப்
புல்லளித்தால் அருந்தியிடா ; உடலும் கொள்ளா ;
நீதியினால் அறிந்துமுகத் தளித்தால் எங்கும்
நிறைவாகும் ; முத்திசிவ லிங்கத் தேனும்,
ஏதமில்சங் கமத்தைவழி படுவோர்க் கன்றி,
எய்தரிய சிவானுபவம் எய்தொ ணாதே."

**முடிவுரை :**

இவ்வாற்றால், நாம் அனைவரும் குரு லிங்க சங்கம வழிபாட்டின் முறைமையும், திறமும் உணர்ந்து, செவ்விதிற் போற்றி உய்ய முயலுவோமாக.

# சக்ரவர்த்திகீரை

திரு. மு. விட்டல் எம்.எஸ்ஸி., (வேளாண்மை)

விஞ்ஞானப்பெயர் ( Chenopodieum olbum )

இதன் விதையும் அரைக்கீரை விதையைப்போன்றிருக்கும். இது செடியாக வளரும். செடி சுமார் 75 செ. மீ. உயரம் வளரும். கீரையின் நடுப்பாகமும் தண்டு காம்புகளும் சிவப்பாக இருக்கும். செடி குத்தாக இருக்கும்.

**இதில் அடங்கியுள்ள சத்துக்களின் விபரம் : ( 100 கிராம் கீரையில் )**

| | | |
|---|---|---|
| ஈரம் | 80—6 | கிராம் |
| புரதம் | 2—8 | ,, |
| கொழுப்பு | 0—6 | ,, |
| தாதுப்பொருள் | 4—2 | ,, |
| நார் சத்து | 1—6 | ,, |
| இதர மாவுப்பொருள் | 8—5 | ,, |
| சுண்ணும்பு | 321 | மில்லி கிராம் |
| பாஸ்பரஸ் | 71 | ,, |
| இரும்பு | 18 | ,, |

**சாகுபடி முறை :**

பருவம் ஆண்டு முழுதுமாயினும், ஆடிப்பட்டம் சிறந்தது.

**நாற்றங்கால் தயாரித்தலும் - நிலம் தயாரித்தலும் :**

சக்ரவர்த்தி கீரையை நாற்றுவிட்டும் நடலாம். மேடைப்பாத்தி தயாரித்து உரிய விதையை 5 (அ) 7 செ. மீ. இடைவெளியில் வரிசையாக விதைத்து நீர்பாய்ச்சவேண்டும் இவ்விதை விதைத்த ஒரு வாரத்திற்குமேல்தான் முளைக்கும். விதைத்த முப்பதுநாள்கழித்துப் பிடுங்கி நடலாம்.

நிலத்தை நான்கைந்துமுறை உழுது நன்கு புழுதியாக்கவேண்டும். இரண்டாம் மூன்றும்முறை உழுகையிலே எக்டருக்கு 25 டன் மக்கிய தொழு உரம் (அ) கம்போஸ்ட் இட்டு உழுதல்வேண்டும். கடைசி உழவிற்குமுன் எக்டருக்கு 125 கிலோ அமோனியம்சல்பேட், 300 கிலோ சூப்பர்பாஸ்பேட், 60 கிலோ முயூரியேட்ஆப்பொட்டாஸ் இட்டு உழுது நிலத்தை 4' அகலமுள்ள பாத்திகளாகப் பிரித்தல் வேண்டும்.

**விதையளவு :**

எக்டருக்கு 3 முதல் 4 கிலோ.

**நடுதல் :**

தயாரித்தபாத்தியில் 30 செ. மீ. வரிசைக்கு வரிசையும், செடிக்கு செடியும் 30 செ. மீ. இடைவெளியும்விட்டு நடுதல்வேண்டும். ஒருமாதநாற்று சுமார் 20 செ. மீ. உயரம் வளர்ந்திருக்கும்.

**நீர்பாய்ச்சலும் - பின் நேர்த்தியும் :**

களைகள் வளரவொட்டாமல் களை எடுத்தல்வேண்டும். விதைத்ததும் ஒருமுறை நீர்பாய்ச்சவேண்டும். பிறகு மூன்றும்நாள் உயிர்நீர் இறைத்தல்வேண்டும். நிலத்திற்கேற்ப ஒருவாரத்திற்கு ஒருமுறையோ ஐந்துநாட்களுக்கு ஒருமுறையோ நீர்பாய்ச்சப்படுகிறது. நகர்ப்புறத்தே உள்ள கீரைத் தோட்டங்களுக்குப் பொதுவாக கழிவுநீர்பாய்ச்சப்படுவதால் அவர்கள் உரமிடுவதே இல்லை.

**அறுவடை :**

நட்ட முதல்மாதத்தில் முதல்முறை கீரையை (கொழுந்துடன்) அறுக்கலாம். நட்ட முப்பதுநாட்களில் சுமார் 70 செ. மீ. உயரம் வளர்ந்திருக்கும். இப்போது பூமியில் இருந்து 45 செ. மீ செடியை விட்டு அதற்குமேல் உள்ள கொழுந்து அனைத்தையும் அரிந்து கத்தையாகக்கட்டி விற்பார்கள். இவ்வாறு அரிய, பிறகு மறுபடியும்துளிர்க்கும். முதல் அறுவடைசெய்த இருபதுநாள் முதல் இருபத்தைந்து நாட்களில் மறுமுறை மேற்கூறியவாறு அறுக்கலாம். இவ்வாறுநட்ட ஐந்துமாதம் வரையில் கீரையை இளம் கொழுந்துடன் அரிந்து பயன்படுத்தலாம். பிறகு அவ்வாறேவிட்டால் விட்ட முப்பதுநாள் முதல் நாற்பதுநாளில் (ஆறும் மாத இறுதியில்) பூத்து காய்த்து விதை எடுக்கப் பக்குவமாயிருக்கும்.

**மேலுரம் :**

முதல்மாத அறுவடைக்குப்பிறகு ஒருமுறையும் நட்ட மூன்றும் மாதம் ஒருமுறையும் ஆக மேலுரமாக 90 கிலோ யூரியாவை (எக்டருக்கு) செடிகட்கு வைத்து நீர்பாய்ச்சவேண்டும்.

**மகசூல் :**

எக்டருக்கு 13,3,000 கத்தைகள் கிடைக்கும், கிலோ ஒரு கத்தை ஐந்துபைசா விலைக்கு விற்கும். பொதுவாக இக்கீரைச்செடி கிராமங்களில் பயிராகும். கத்தரிக்காய், மிளகாய், வெண்டைக்காய் முதலிய காய்கறித்தோட்டத்தைச் சுற்றிலும், நீர் கால்வாயின் மீதும், பாத்தி கரையின் மீதும் நட்டு உபரி வருமானத்தை விவசாயப்பெரு மக்கள் பெறலாம்.

# வம்பில் பழுத்த ரசக்கனி

வித்துவான். திருமதி. ப. நீலா எம்.ஏ.

"அழகு!" பழகுதமிழின் சிறப்பெழுத்தை நடுவேகொண்டு, உயிரும் உயிர்சார்ந்த மெய்யும் முன்னும் பின்னும்வர அழகுபவனி வருகிறது. உலக அழகு அழிவது. அதனுல் மனம் சிறிதுபொழுதே அவ்வழகைப் பற்றிநிற்கும். அழியும் அழகு இதுவென்றுல் அழியா அழகு இருக்கவேண்டுமே! இருக்கிறதா! இருந்தால் அவ்வழகால் என்ன கிடைக்கும்?

வரிசையான கேள்விகளுக்கு இதோ விடை. அழியா அழகுடையவள் மட்டுமில்லே. அழகிற்கு இணைகூடக் கூறமுடியாத பேரழகி அவள். அவள்பெயர்தான் அபிராமி. அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லி. அவ்வழகால் நாம் பெறுவது ஆனந்தமே. அதையே பேரானந்தம் என்போம். அழியா முத்தியானந்தம் என்கிருர் அபிராமிப் பட்டர்.

**அழகெனும் அழகு :**

உலகில் அணிபணிகளால் பெண்கள் தம்மை அழகுபடுத்திக் கொள்வார்கள். அவ்வழகு சீதையிடம் வந்தபோது தானே அழகு பெற்றுநின்றதாம். சீதையால் அழகுபெற்ற அழகை 'அழகெனும் அழகு ஓர் அழகுபெற்றதே' என்று சுட்டுவார் கம்பர். இது அழகு பற்றிய 'இடைப்பிற' வந்த சிந்தனையாக இருக்கட்டும்.

**வம்பென வந்தாள் :**

இனித்த நறுஞ்சுவைக் கரும்பாம் அம்மையைப் பட்டர் கண்டு பாடுகிருர் விண்ணிலிருந்து இறங்கிய ஓர் அற்புதக்கொடியென்று. 'கொடி' என்றுலும் முதுமை தோன்றுமோ எனக் கவலைப்பட்டு 'இளவஞ்சிக் கொம்பு' என்றுர் பின்னே. அவள் இவருக்கு எப்படி அமைந்தாளாம் தெரியுமா! காலமல்லாத காலத்தில் கிடைக்கும் அற்புதக்கனியாகிக் கனிந்து வந்தாள் என்கிருர்.

சரியான பக்குவம் பெருத ஆன்மாவாக இருக்கும் தன்னிடம் வந்தவளைத் தான் சரியானபடி உபசரிக்க, துதிக்க, மதிக்கமுடியாமல் போய்விட்டதே என்ற கழிவிரக்கம் இப்படிப்பேசுகிறது.

**இணைத்துப்பார்க்க இது :**

மாயூரம் அபயாம்பிகை சதகத்தில் ஆசிரியர் நல்லத்துக்குடி ஸ்ரீ கிருஷ்ணய்யர் அவர்கள் தேவியைத் துதிக்கிறார். 'உம்பர், முனிவர் முதலோர்க்கும் உணர்தற்கரிதாய் இருப்பவளே' என்று தொடங்கி வரிசையாய் அவள் பெருமை பேசிவந்தவர் பாடல் கடைசியில் இப்படி முடிக்கிறார்.

"வம்பில் பழுத்த ரசக்கனியே.மதமோகினியே யோகினியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே.அபயாம்பிகைத் தாயே."

ஒரு கனி. அது கிடைக்கும் காலம் அதன் மதிப்புதெரியாக் காலமாகும். அது கிடைக்காத நேரத்தில் கிடைக்கிறது என்றால் உண்மையில் மனிதர் அதனைக் கொண்டாடிக்கொள்வார் இல்லையா? கிடைக்காது என்று முடிவுகட்டிய ஒன்று இப்படிப் புதுமையாய்ப் பூத்துவந்ததே என்று உளம் பூரிப்பர். ஆனால் தேவி! நீ ஒருதவமும் இல்லாத என்பால் வந்தாயே! உன்னை உள்ளவாறு அறியும் ஆற்றல் கூட என்னிடம் இல்லையே என்று கசிகிறார்.

**கருத்தை விளக்க இதோ ஒரு கதை :**

ஐம்பொறிகளுக்கும் புலன்களை இரையாக்காமல் குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன் (குதிரையோட்டி) போல நன்னெறிக்கண் மனத்தை நடத்தும் ஒரு முனிவர். கொடுங்காட்டில் நெடுங்காலமாகத் தவம் செய்கிறார் நரசிங்கத்தை எப்படியாவது தரிசித்துவிடவேண்டுமென்று. பல்லாண்டுகாலம்முயன்றும் ஒருபலனுமில்லை. காணவே முடியாதோ என்ற அவநம்பிக்கைவேறு இடையிடையே தலைதூக்கும்.

ஒருநாள் அவ்வழிவந்த - கொடுவாளொடுவந்த கொலைவேடன் அவரைக் கண்டான். திண்ணென்ற உடல், துண்ணென்ற மொழி, அடங்கிய வயிறும் அடங்கா மீசையுமாக வந்தவனை முனிவரும் பார்த்தார். தென்னை ஈர்க்குப்போலுள்ள இவரை ஒடித்து என்ன பலன். பல்குத்தக்கூட இவர் சரீரம் பயன்படாது என்று நினைத்தானோ என்னவோ "உமக்கு என் காவல் பரப்பில் வேலை என்ன?" என்று கேட்ட இடியொலியில் மரங்கள் சில சடசட எனச்சாய்ந்தன.

முனிவர் பார்த்தார் 'முன்னுரை பேசிமுடிக்குமுன் இவன் என்னை முடித்துவிடுவான்' என்று செய்தியை அவன் பாஷையில் 'வெட்டு ஒன்று துண்டுரெண்டாக'க் கூறினார். அப்பா! நான் வெகுகாலமாக 'நரசிம்மம்' என்ற ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கிறேன்' - என்றார்.

வேடன் இடி இடி என்று சிரித்து 'அப்படி என்றால் என்ன சாமி' - என்று சற்றுப் பணிந்தே கேட்டான். முனிவர் நரசிங்கத்தை - மனித உடலும் யாளிமுகமும் கொண்டு இரணியனை வதைத்த திருவுருவை மனத்தில் பதித்துப் பக்தியோடு வருணித்தார்.

பொறுமையிழந்த வேடன் 'சாமி' சத்தியமாய்ச் சொல்லுகிறேன். இந்தக்காட்டில் அப்படியொரு மிருகம் கிடையவே கிடையாது. நானும் நாற்பது ஆண்டுகள் இங்கு அலைந்தவன் என்ற துணிவில் கூறுகிறேன்' - என்று அடித்துச் சொன்னான். முனிவர் சொன்னதையே மீண்டும் சாதித்தார். முடிவில் வேடன் வலது கையை உயர தூக்கி (கோபத்தொடு பேசும் போது இச்செய்கை அவன் பழக்கமோ என்னமோ) 'ஓய்! இங்கே பாரும்! இன்று மாலைக்குள் அப்படியொரு விலங்கு இந்தக்காட்டில் இருந்தால் நிச்சயம் பிடித்து வருவேன். அதில் சந்தேகம் வேண்டாம்' - என்று கூறிவிட்டு மின்னல்வேகத்தில் மறைந்துவிட்டான்.

மாலை மணி ஆறு. இதுவரை அவன் அலையாத இடமில்லை. காலையிலிருந்து ஒரு விநாடிகூட நிற்கவில்லை. பசி, இளைப்பு, தாகம் இதெல்லாம் மறந்தேவிட்டது. மூச்சுவிடும்போதெல்லாம் 'நரசிம்மம்' என்ற நாம ஜெபம்தான். காடுமேடு பாராமல் நடந்து உடலெல்லாம் கீறல் பிளவுகள் இரத்தம் கசிந்தும் சில இடங்களில் வழிந்தும் ஓடியிருக்கிறது. இன்னும் அவன் நரசிம்மத்தைக் காணவில்லை. முனிவரிடம் சொன்ன நேரம் வந்துவிட்டது. கதிரவன் மேற்கில் சாய்ந்துவிட்டான். அந்தப் பொல்லாத மிருகம் இன்னும் தன்னிடம் ஆட்டம் போடுகிறதே என்ற அவமானம் வேறு. திடீரென என்ன தோன்றியதோ! தன் கொடுவாளைக் கழுத்தில் சேர்த்து, ஏ அற்ப விலங்கே! நீ என்னிடம் அகப்பட மறுத்துவிட்டாய்; ஆனால் நான் சொன்ன சொல் தவறமாட்டேன்; இதோ தலையை அறுத்து உயிரை விடுகிறேன் என்று கூறிக்கொண்டு அரிவாளை வசமாக்கும்போது, ஒரு நூதனமான கர்ஜனை கேட்டது. அரிவாள் எந்தத் தலையைப் பறந்தது என்று தெரியாது. எதிரில் இருந்த புதரிலிருந்து ஓடி வந்ததாக, ஒரே பாய்ச்சலில் பாய்ந்தான். அங்கே சாட்சாத் 'நரசிம்மம்' தன்கால்களை மடக்கிக்கொண்டு அமர்ந்திருந்தது. யோசிக்கப் பொழுதில்லை. காட்டுக் கொடிகளைக் கட்டிலடங்கா ஆவேசத்துடன் வெட்டி, நரசிம்மத்தை அதுகொண்டு கட்டி தரதர என இழுத்துக்கொண்டு ஓடிவந்தான் முனிவரிருக்கும் இடத்திற்கு. 'ஓய்! முனிவா! இதோ நீ சொன்ன மிருகம். ஆனாலும் லேசுபட்டதில்லை. ஆட்டம்காட்டி எனை அலையவிட்ட பின் தானே அகப்பட்டது! என்கை காட்டுக் கொடியில் கட்டுண்டு நாய்க்குட்டிபோல் வந்துள்ளதுபார்' - என்றான்.

முனிவருக்கு எதுவும் விளங்கவில்லை. கண்ணுக்குத் தெரியவுமில்லை. 'என்னப்பா உளறுகிறாய்' - என்று கேட்ட அடுத்த வினாடி அண்டம் அதிர ஒரு கர்ஜனை மூலம் தன் இருப்பைக் காட்டியது நரசிம்மம்.

வேடன் பாதத்தைப் பற்றி நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார் முனிவர். 'அப்பா உன்னைப்போன்ற ஒரே சித்தமில்லாமல் (ஏகாக்ர சித்தம்) சலனசித்தத்தில் நான் தேட எனக்கு எப்படியப்பா சர்வேஸ்வரன் அகப்படுவான். அந்த யோக்கிதை உனக்கன்றோ இருக்கிறது. நீயன்றோ பாக்கியவான் என்று கூறிக் கதறிக் கண்ணீர் வடித்து நின்றார். இதை நாம் எப்படிக் கருதுவது? கல்லாத வேடனின் அன்பில் அகப்பட்டவன் எதனால் பல்லாண்டு தவங்கிடக்கும் பக்தனுக்கு அகப்படவில்லை! யார் பதில் சொல்லமுடியும்! அது தான் திருவிளையாடல் போலும்.

**மணிவாசகம் பேசுமே :**

எனக்கு ஒருதகுதியும் இல்லையே. சீலம் நோன்பு தெளிவு அறிவு சிறிதும் இல்லாத என்னிடம், தீவிர பக்திமான்களிடம் செல்லாமல் வந்தாயே இறைவா! அது உன் எளிமையை யன்றோ காட்டுகிறது.

"பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ் மேலாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்"

என்கிறார்.

**நமக்கும் இது வம்புதான்:**

வம்பார் குன்றம் - நீடுயர் சாரல் கொண்ட திருக்குற்றாலம் என்றும் புதுமைமாறுக் காட்சியுடையதென ஆளுடைய பிள்ளையாரும் காட்டுகிறாரே! அதனால் வம்பு-என்ற சொற்குப் புதுமையென்ற பொருள் கண்டு கடவூர் திரும்புகிறோம். கணீரெனக் காதில் விழுகிறது அபிராமிப் பட்டர்குரல்.

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே பனிமா லிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங் கினிப் பிறவாமல் வந்தாண்டுகொள்ளே.

வம்பே பழுத்த செம்மதுரக்கனியாக அம்மையும் ஆனாள். அஞ்சொல் கவிதையும் அப்படியே ஆயிற்று.

# உருத்திராக்ஷத்தின் தோற்றமும் அதன் பெருமையும்

பிரவசனரத்நம், வியாகரணசிரோமணி, இந்திவிசாரத்.
திரு. P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்

( மலர் 37, இதழ் 6, பக்கம் 289 இன் தொடர்ச்சி )

### ஆறுமுக உருத்திராக்ஷம்

இது கார்த்திகேயரே (முருகரே) யாகும். இந்த உருத்திராக்ஷத்தை வலது புஜத்தில் அணிபவர் பிரும்மஹத்தி முதலிய கொடிய பாவங்களிலிருந்து விடுபடுவார். இதன்மாலையால் ஓம், ஹ்ரீம், ச்ரீம், க்லீம், ஸௌம், ஐம் என்றமந்திரத்தை, சுவாமி கார்த்திகேயரைத் தியானம் செய்துகொண்டு ஜபிப்பவர், கடந்தகாலத்திலும், நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் உள்ள எல்லாப் பாவங்களும் சாம்பலாகின்றன.

### அணியும் முறை

அஸ்யஸ்ரீ மந்த்ரஸ்ய தக்ஷிணாமூர்த்தி : ரிஷி: ] பங்க்தி : சந்த: ] கார்த்திகேய : தேவதா ] ஐம் பீஜம் ஸௌம் சக்தி : ] க்லீம் கீலகம் ] அபீஷ்ட ஸித்யர்த்தே ருத்ராக்ஷ தாரணார்த்தே ஜபே விநியோக: ] தக்ஷிணாமூர்த்தி ரிஷயே நம : சிரஸி ] பங்திச்சந்தஸே நமோ முகே ] கார்த்திகேய தேவதாயை நமோ ஹ்ருதி ] ஐம் பீஜாய நமோ குஹ்யே ] சௌம் சக்தயே நம: பாதயோ : ]

### அடுத்து கரந்யாசம்

ஓம் ஓம் அங்குஷ்டாப்யாம் நம: ] ஓம் ஹ்ரீம் தர்ஜநீப்யாம் சுவாஹா ] ஓம் மத்யமாப்யாம் வஷ்ட் ] ஓம் க்லீம் அநாமிகாப்யாம் ஹும் ] ஓம் ஸௌம் கநிஷ்டிகாப்யாம் வௌஷட் ] ஓம் ஐம் கரதலகர ப்ருஷ்டாப்யாம் பட் ]

### அடுத்து அங்கந்யாசம்

ஓம் ஹ்ருதயாய நம : ] ஓம் ஹ்ரீம் சிரசே சுவாஹா ] ஓம் ச்ரீம் சிகாயை வஷ்ட் ] ஓம் க்லீம் கவசாயஹும் ] ஓம் சௌம் நேத்ரத்ரயாய வௌஷட் ] ஓம் அஸ்த்ராய பட் ]

### அடுதது தியானம்

க்ரௌஞ்ச பர்வத விதாரண லோல தாநவேந்த்ர வநிதாக்ருத லண்ட சூத பல்லவ சிரோமணி சோதீ போ ஷடாநந ஜகத் பரி பாஹி ll கிரௌஞ்சமலையைப் பிளப்பதில் ஈடுபட்டவரும் அசுரஸ்திரீ களால் ஏற்றப் பட்டவரும் மாந்தளிரைச் சிரசில் அணிந்தவருமாகிய ஓ ஆறுமுகரே உலகைக் காப்பாற்றுங்கள்.

### ஏழுமுக உருத்திராக்ஷம்

இந்த உருத்திராக்ஷத்தை அநந்த ருத்திராக்ஷம் என்றும் கூறு வார்கள். இதன் மாலையால் ஓம், ஹ்ரம், க்ரீம், ஹ்ரீம் ஸௌம் என்ற மந்திரத்தை ஜபித்தால் தங்கத்திருட்டு பசுவதம் முதலிய பல பாவங்கள் விலகும். ஜபிப்பவருக்குத் தனமும் கிடைக்கும்.

### அணியும் முறை

ஓம் ஹ்ரம் க்ரீம் ஹ்ரீம் என்பன மந்திரங்கள்.

அஸ்யஸ்ரீ அநந்த மந்த்ரஸ்ய பகவான் ரிஷி : l காயத்ரீ சந்த : l அநந்தோ தேவதா l க்ரீம் பீஜம் l ஹ்ரீம் சக்தி: l அபீஷ்டஸித்யர்த்தே ருத்ராக்ஷதாரணார்த்தே ஜபே விநியோக: l பகவதே ரிஷயே நம: சிரஸி l காயத்ரீ சந்தஸே நமோ குஹ்யே l ஹ்ரீம் சக்தயே நம: பாதயோ : l.

### அடுத்து கரநியாசம்

ஓம் ஓம் அங்குஷ்டாப்யாம் நம: l ஓம் ஹ்ரீம் தர்ஜநீப்யாம் சுவகா,ஓம் க்ரீம் மத்யமாப்யாம் வஷட் l ஓம் க்லௌம்அநாமி காப்யாம் ஹூம்,ஓம் ஹ்ரீம் கநிஷ்டிகாப்யாம் வௌஷட் l ஓம் ஸௌம் கரதலகர ப்ருஷ்டாப்யாம் பட்.

### அங்கநியாசம்

ஓம் ஓம் ஹ்ருதாய நம: ஓம் ஹூம் சிரஸே ஸ்வாகா. ஓம் க்ரீம் சிகாயை வஷட் l ஓம் க்லௌம் கவசாய ஹூம். ஓம் ஹ்ரீம் நேத்ரத்ரயாய வௌஷட், ஓம் சௌம் அஸ்த்ராய பட்.

### தியானம்

அநந்தம் புண்டரீகாக்ஷம் பணஸந விபூஷிதம்l
விச்வக் பந்தூக ஆகாரம் கூர்மாரூடம் ப்ரபூஜயேத் ll

முடிவற்றும் தாமரைக்கண் பெற்றும் பாம்பை ஆபரணமாகக் கொண்டும் எங்கும் பந்தூக புஷ்பம் போல் உருவம் கொண்டும் உள்ள ஆமையின்மேலுள்ளவரை நன்கு பூஜிக்கவேண்டும்.

### எட்டுமுக உருத்திராக்ஷம்

இது கணேச ஸ்வரூபமேயாகும். சிவபுராணத்தில் உள்ளபடி இது அஷ்டபைரவ ரூபமாகக் கருதப்படுகிறது. இதன் மாலையால் ஹ்ராம், க்ரீம், லம், ஆம், ச்ரீம் என்ற மந்திரந்தை ஜபம்செய்தால் நீண்ட ஆயுளும், மரணத்திற்குப்பிறகு சதாசிவருடைய கிருபையால் சிவசாயுஜ்யமும் கிட்டும்

### அணியும் முறை

அஸ்யஸ்ரீ கணேசமந்திரஸ்ய பார்கவரிஷி : | அனுஷ்டுப் சந்த : விநாயகோ தேவதா | க்ரீம் பீஜம் | ஆம் சக்தி : | சதுர்வர்க ஸித்யர்த்தே ருத்ராக்ஷதாரணார்த்தே ஜபே விநியோக: | பார்க்கவ ரிஷயே நம: சிரஸி | அனுஷ்டுப் சந்தசே நமோ முகே | விநாயக தேவதாயை நமோஹ்ருதி | க்ரீம் பீஜாய நமோ குஹ்யே | ஆம் சக்தயே நம: பாதயோ : |

### கரநியாசம்

ஓம் ஓம் அங்குஷ்டாப்யாம் நம: | ஓம் ஹ்ராம் தர்ஜநீப்யாம் சுவாஹா | ஓம் க்ரீம் மத்யமாப்யாம்வஷட் | ஓம் ச்ரீம் கரதலகர ப்ருஷ்டாப்யாம் பட்.

### அங்கநியாசம்

ஓம் ஓம் ஹ்ருதயாய நம: ஓம் ஹ்ராம் சிரசே ஸ்வாகா | ஓம் க்ரீம் சிகாயை வஷட் | ஓம் லம் கவசாய ஹூம் | ஓம் நேத்ரத் த்ரயாய வௌஷட் | ஓம் ச்ரீம் அஸ்த்ராய பட்.

### தியானம்

ஹரதுகுல கணேசோ வித்ன ஸங்காத சேஷாந்
நயது சகல சம்பத் பூர்ணதாம் சாதகாநாம் |
பிப்து வடுகநாத: சோணிதம் நிந்தகாநாம்
திசது சகல காமாந் கௌலிகாநாம் கணேச: ||

குலகணேசர் இடையூறுகளைப் போக்கவேண்டும். சாதகர்களுக்கு நிறைந்த சம்பத்தை அளிக்கவேண்டும். பிரும்மசாரியாகிய கணேசர் தூஷிப்பவர்களின் இரத்தத்தைக் குடிக்கட்டும். கௌலிகர்களுக்கு எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றவேண்டும்.

### ஒன்பது முகம்

இந்த உருத்திராக்ஷத்தைப் பைரவ உருத்திராக்ஷம் எனச் சொல்கின்றனர். இது செந்நிறமாக இருக்கும். இதன் அதிஷ்டானதேவதை அம்பிகையாகும். இதை இடதுகையில் அணிபவர் சிவரூபமாகவே ஆகிறார். இதன் மாலையால் ஓம், ஹ்ரீம், வம், யம், ரம், லம் என்னும் மந்திரத்தை ஜபம் செய்தால் கோடிக்கணக்கான பாவம் தொலைந்து பைரவப்ராப்தி ஏற்படுகிறது.

### அணியும் முறை

ஓம் ஹ்ரீம் வம் யம் ரம் லம் என்பன மந்திரங்கள்.

அஸ்யஸ்ரீ பைரவ மந்திரஸ்ய நாரத ரிஷி: | காயத்ரீ சந்த: | பைரவோதேவதா | ஸம் பீஜம் ஹ்ரீம் சக்தி: | அபீஷ்ட சித்யர்த்தே ருத்ராக்ஷ தாரணார்த்தே ஜபேவிநியோக: நாரதரிஷயே நம: சிரஸி | காயத்ரி சந்தசே நமோ முகே | பைரவ தேவதாயை நமோ ஹ்ருதி | வம் பீஜாய நமோ குஹ்யே | ஹ்ரீம் சக்தயே நம: பாதயோ: |.

### கரநியாசம்

ஓம் ஓம் அங்குஷ்டாப்யாம் நம: | ஓம் ஹ்ரீம் தர்ஜநீப்யாம் சுவாஹா, ஓம் ஓம் சிகாயை வஷட் | ஓம் யம் கவசாய ஹும் | ஓம் ரம் நேத்ர த்ரயாய வௌஷட் | ஓம் லம் கரதலகர ப்ருஷ்டாப்யாம்பட்

### அங்கநியாசம்

ஓம் ஓம் ஹ்ருதயாய நம: ஓம் ஹ்ரீம் சிரசே சுவாஹா | ஓம் வம் சிகாயை வஷட் | ஓம் கவசாய ஹும் | ரம் நேத்ரத்ரயாய வௌஷட் | ஓம் லம் அஸ்த்ராய பட் |

### தியானம்

கபாலஹஸ்தம் புஜகோபவீதம் க்ருஷ்ணச்ச விம்சேந் துதரம் த்ரிணேத்ரம், அசிந்த்யமாத்யம் மதுபாந மத்தம் ஹ்ருதி ஸ்மரேத் பைரவ மிஷ்டதம் ந்ருணம் ||

கபாலத்தைக் கையில் கொண்டும் பாம்பைப் பூணூலாகக் கொண்டும் கருமைநிறம் வாய்ந்தும் சந்திரனைத்தரித்தும் மூன்று கண்களோடு கூடியும் மனத்தால் காணத்தகாதவரும் ஆதியாக இருப்பவரும், மதுவருந்தியதால் மயக்கமுள்ள (பதட்டமுள்ள) வரும் மனிதர்களுக்கு விரும்பியவற்றை அளிப்பவராகவுமுள்ள பைரவரை இருதயத்தில் ஸ்மரிக்கவேண்டும். (தொடரும்)

உ

சிவமயம்

### ஆனித்திங்கள்

# ஆயில்யத் திருநாள் வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநட்சத்திரத் திருநாளாகிய ஆனித்திங்கள் ஆயில்யத்தன்று 8—7—78 காலை **திருப்பூந்துருத்தி** அருள்மிகு அழகார்ந்தநாயகி சமேத அருள்மிகு புஷ்பவனேசுவரர் திருக்கோயிலில் வழிபாடு நடைபெறும். அப்பர்பெருமான் திருமடம் அமைத்துத் தங்கியிருந்து திருத்தொண்டாற்றிய இத்தலத்தில் அன்பர்கள் பலரும் உழவாரத் திருத்தொண்டும், சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்துவர். மாலையில் **திருக்கண்டியூர்** அருள்மிகு மங்களநாயகி உடனாகிய அருள்மிகு வீரட்டேசுவரர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடும் சமய விரிவுரைகளும் நிகழும்.

அன்பர்கள் அனைவரும்வந்து கலந்துகொண்டு குருவருளும் திருவருளும் பெறுவார்களாக.

# செய்திகள்

## ஜன்மநக்ஷத்திர விழா வழிபாடு

தருமையாதீனம் 26 - ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திரத்திருநாள் (காளயுக்தி - வைகாசி ஆயில்யம்) 11—6—78 ஞாயிற்றுக்கிழமை காலையில் திருவாலம்பொழில் அருள்மிகு ஞானம்பிகை உடனுகிய அருள்மிகு வடமூலேசுவரர் திருக்கோயிலிலும் மாலையில் திருக்காட்டுப்பள்ளி அருள்மிகு சௌந்தரநாயகி உடனுகிய அருள்மிகு அக்கினீசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் கொண்டாடப்பெற்றது. தலத்திருப்பதிகங்கள் அச்சிட்டு ஓதப்பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பெற்றன.

திருக்காட்டுப்பள்ளியில் மாலை 6 மணி அளவில் திருவையாறு அருள்மிகு ஐயாறப்பர் திருக்கோயில் சூப்பரின்டெண்டெண்ட் திரு. கிருஷ்ணமூர்த்தி முதலியார் அவர்கள் தலைமையில் தருமையாதீனம் தமிழ்க்கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்கள் மூர்த்தி தலம் தீர்த்தம் என்பதுபற்றிப் பேசினுர்கள். கோயில்நிர்வாகிகள். உடனிருந்து வழிபாடு செய்வித்தனர். வார வழிபாட்டுக் கழக அன்பர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### தருமை ஆதீனத்தில்

## ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழா

திருக்கயிலாயபுரம்பரைத் தருமையாதீனத்தின் முதற் குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஜீவசமாதி எய்திய திருக்கோயிலாகிய ஞானபுரீசுவரர் ஆலயத்தில் 17—5—78 முதல் பெருவிழா தொடங்கி நடைபெற்றது. நாடோறும் காலை மாலை இரு வேளைகளிலும் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக் காட்சியின்போது ஆதீன வேதசிவாகம பாடசாலை, தேவாரபாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆதீன தேவஸ்தான ஓதுவாமூர்த்திகளும் வேத பாராயணமும் திருமுறைப்பாராயணமும் நிகழ்த்தினுர்கள். அன்பர்கள் தரிசித்தும் கேட்டும் இன்புற்றனர்.

## குருபூஜைப் பெரு விழா

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைப் பெருவிழா 27—5—78 சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்தருளினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் வழிபாட்டில் கலந்து கொண்டு திருவருட்பிரசாதமும் அருளாசியும் பெற்று மகிழ்ந்தார்கள்.

நண்பகல் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சிறப்பாக அபிஷேகங்களும் பஞ்சமுகார்ச்சனை நவசக்தி அருச்சனை ஆகியவையும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்களுக்கெல்லாம் அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள். வழிபாடு முடிந்ததும் மாகேசுவர பூஜை நடைபெற்றது.

## குருமூர்த்த தரிசனம்

குருபூஜை விழாவன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மாலை 6 மணி அளவில் நாதசுர இன்னிசை முழக்கத்துடன் திருமஞ்சன வீதியில் அமைந்திருக்கும் குருமூர்த்தங்களைத் தரிசித்து வழிபாடாற்ற எழுந்தருளினார்கள். ஒவ்வொரு குருமூர்த்தத்திலும் அருள்வரலாற்று விளக்கம் கூறப்பட்டது. வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஸ்ரீ தர்மபுரீசுவரர் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி திருக்கோவில்களிலும் வழிபாடுநிறைவேற்றித் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குக் குருபூஜை நாளில் நிகழ்த்தப்பெறுகின்ற சிறப்பு வழிபாடுகள் திருமெய்ஞ்ஞான நிவேதனத்துடன் நிகழ்த்தப்பெற்றன. அன்பர்கள் பலரும் உடனிருந்து தரிசனம்செய்து அருட்பிரசாதமும் திருமெய்ஞ்ஞானப்பிரசாதமும் பெற்று மகிழ்ந்தனர்.

வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கொலு வீற்றிருந்து அருட்காட்சிவழங்கினார்கள். ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர்கள் கொலு வழிபாடு நிகழ்த்தினார்கள். திருக்கூட்டத்து அடியவர்களும் பெருமக்களும் தரிசித்து அருட்பிரசாதம் பெற்று உய்ந்தனர்.

## பட்டணப்பிரவேசம்

28—5—78 அன்று பட்டணப்பிரவேசத்திருநாள். ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்த பின்னர் மாகேசுவரபூசை நடைபெற்றது. இரவு தருமையாதீன

இசைப்புலவர் சீகாழி திரு. எஸ். கோவிந்தராஜன் குழுவினரின் இன்னிசையரங்கு நடைபெற்றது. இரவு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிவிகையில் எழுந்தருளி, திருவுலாக்காட்சிதந்தருளினார்கள். திருக்கூட்டத்தடியவர்களும், பெருமக்களும், அன்பர்களும் உடன் வந்தனர். நாதசுர இன்னிசையும் திருமுறை இன்னிசையும் முழங்கின. இல்லங்கள்தோறும் பூர்ண கும்பங்கள் வைத்து ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை வணங்கி வழிபட்டு அருட்பிரசாதம் பெற்றனர். திருவுலாக்காட்சி நிறைவெய்தியதும் திருக்கொலுக்காட்சி நடை பெற்றது. திருப்பனந்தாள் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் கொலுவழி பாட்டுப் பூசனையைச் சிறப்புறச் செய்தார்கள். எல்லோருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருட்பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

## சமயப்பயிற்சி வகுப்பு

குருபூசை விழாவை முன்னிட்டு 18—5—78 முதல் பத்து நாட்களிலும் சமயப்பயிற்சி வகுப்பு நடைபெற்றது. முதல்நாள் குருவாரம் ஆதலின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மௌன நிலையில் எழுந்தருளியிருக்க, அவர்கள் திருமுன்பு காலை 9-மணி அளவில் திருமடாலயத்தில் வகுப்பு தொடங்கப்பெற்றது. தூத்துக்குடி திரு. A. P. C. வீரபாகு பி. ஏ. அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தி னார்கள். ஒவ்வொரு நாளும் வேதம், ஆகமம், உபநிடதம், பத்ததிகள் பூசா விதிகள் இவைகளைப்பற்றி ஆடூர் சிவஸ்ரீ வைத்தியநாத சிவா சாரியார் அவர்களும், சித்தாந்த சாத்திரநூல்களில் திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் என்னும் இரு நூல்களின் கருத்துக்களை தருமையாதீனப்புலவர்கள் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. அவர் களும், திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். அவர்களும் காலை மாலை இருவேளைகளிலும் விரிவுரை வாயிலாக விளக்கிப் பேசி னார்கள். தொடர்வகுப்பேயன்றி சிறப்பு வகுப்பாகத் தருமையாதீப் பாடசாலை ஆசிரியர் திரு. P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், ஆனந்ததாண்டவபுரம் திரு. பி. இராமதாசஐயர், ஆதீனக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ., திரு. இரா. செல்வக் கணபதி எம். ஏ., A. V. C. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலனார் எம். ஏ., பி. எச். டி., திரு. அ. ச. ஞான சம்பந்தம் எம். ஏ. ஆகியோர் இதிகாசம், புராணம், திருமுறைகள், பண்டார சாத்திரங்கள், திருத்தொண்டர்புராணம், சைவக்கிரியைகள் இவைபற்றிய விளக்கவுரைகள் நிகழ்த்தினர். யோகத்தின் இன்றி யமையாமையையும் அதனால் அடையும் பயனையும் திரு T. K. தேவராசலு பார்-அட்-லா. அவர்கள் பயிற்சியாளர்களுக்கு எடுத்துரைத்தார்கள். நிறைவுநாளன்று பயிற்சி வகுப்பில் பயின்றவர்

களுக்குச் சென்னை முன்னாள் அறநிலையத்துறை ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் பி. ஏ. பி. எல். அவர்கள் குருமகா சந்நிதானம் அவர்கள் ஆணையின் வண்ணம் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள். பல மாவட்டங்களிலிருந்தும் தமிழாசிரியர், பட்டதாரி ஆசிரியர், இடைநிலை ஆசிரியர், மருத்துவர் உள்ளிட்ட முப்பதின்மர் வகுப்பில் கலந்துகொண்டனர். ஆதீனத்தில் உண்டி முதலிய எல்லாவசதிகளும் செய்து தரப்பட்டன.

## திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

தருமையாதீனஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழாவை முன்னிட்டுத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் 18—5—78 முதல் 28—5—78 வரை திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நாள்தோறும் மாலை 7 மணிமுதல் சிறப்பாக நடைபெற்றது. நாடோறும் மாநாட்டுத் தொடக்கத்தின் போது தருமையாதீனத் தேவாரப்பாடசாலை ஆசிரியர் மாணவர்களும் ஆதீனத் திருக்கோயில் ஓதுவாமூர்த்திகளும் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர்கள். ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களாலும், ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்களாலும், மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை விரிவுரைகள் நிகழ்த்திய அறிஞர்கள்வரவேற்கப்பெற்றார்கள்.

மாநாட்டில் பட்டிமன்றம், வழக்காடுமன்றம், கவியரங்கம், சிந்தனைமேடை, கருத்தரங்கம் முதலிய நிகழ்ச்சிகளும், மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையாரின் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளும், திரைப்படக் காட்சிகளும், சிதம்பரம் வித்துவான், திரு. வா. ச. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் குழுவினரின் அப்பர்அருட்பாடல் ஆடல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## புதுவை முதலமைச்சர் வருகை

புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு. S. இராமசாமி அவர்கள் 6-6-78 செவ்வாய்க்கிழமை மாலை தருமையாதீனத்திற்குக் குடும்பத்தினருடன் வருகைபுரிந்தனர். திருநள்ளாறு தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத்தம்பிரான்சுவாமிகள் அவர்கள் முதல்வருக்கு மாலை சூட்டி வரவேற்றார்கள். முதல்வர் தமது நாற்பதாவது ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு அருச்சனைசெய்வித்து வழிபாடாற்றினர்கள். ஆதீன நூல்நிலையத்தைக் கண்டுகளித்து ஸ்ரீ சொக்கநாதப்பெருமானையும் வழிபட்டார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தபோது அவர்கள் முதல்வருக்குப் பொன்னாடை போர்த்தி அருட்பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

## ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சமயாசாரியருள் இரண்டாமவராகிய ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருநட்சத்திரமாகிய சதயத் திருநாளை முன்னிட்டு சமயாசாரியர், சந்தானுசாரியர்களுக்கு 2—5—78 செவ்வாய்க்கிழமைகாலை விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டு அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். இரவு 8 மணியளவில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருவீதியுலா சிறப்புற நிகழ்ந்தது. திருவீதியுலாவில் ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்களால் அப்பர் சுவாமிகளின் அருள் வரலாற்று அற்புத நிகழ்ச்சிகள்பற்றி விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. அன்பர்கள் பலர் வழிபட்டும் விரிவுரைகளைக்கேட்டும் பயன்பெற்றனர்.

தருமையாதீன தேவஸ்தானங்களில் :

## வேளூரில் வசந்தோற்சவம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில் (புள்ளிருக்குவேளூர்) ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 13—5—78 முதல் 22—5—78 முடிய வசந்தோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. நாடோறும் மாலை ஸ்ரீ தையல்நாயகி உடனாகிய ஸ்ரீ வைத்தியநாதசுவாமி வசந்தமண்டபத்திற்கு எழுந்தருளி ஊஞ்சல் திருநாள் கொண்டருளினர். அன்பர்கள் தரிசித்து இறையருள்பெற்று உய்ந்தனர்.

## ஆச்சாள்புரத்தில் திருக்கல்யாணப் பெருவிழா

தருமையாதீனத்துக்குச் சொந்தமான ஆச்சாள்புரம் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மை உடனாகிய சிவலோகத் தியாகராச சுவாமி திருக்கோயிலில் 24—5 78 புதன்கிழமை அன்று திருஞானசம்பந்த சுவாமிகள் திருக்கல்யாணப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. காலை திருஞானசம்பந்தப் பெருமானுக்கு உபநயனமும், இரவு 10 மணி அளவில் ஸ்ரீ தோத்திர பூர்ணாம்பிகைக்கும் ஸ்ரீ திருஞானசம்பந்தருக்கும் திருக்கல்யாண வைபவமும், புஷ்பப்பல்லக்கில் திருவீதி யுலாக்காட்சியும் நடைபெற்றன. இரவு 4-மணி அளவில் பேரின்பப் பேறளிக்கும் திருப்பதிகம் ஓதுதலும் சிவச்சோதியில் புக்கொன்றி உடனான திருக்காட்சியும் நிகழ்ந்தன. மாலை 6-மணி அளவில் நடைபெற்ற தேவார வகுப்பு ஆண்டு விழாவில் தருமையாதீனப்பல்கலைக்கல்லூரித் துணைப்பேராசிரியர் வித்துவான். திரு. மு.

சிவச்சந்திரன் எம். ஏ. அவர்கள் 'திருஞானசம்பந்தர் திருமணம்' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள். தேர்ச்சிபெற்ற மாணவர் களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**திருவையாற்றில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி உடனுகிய ஸ்ரீ ஐயாறப்பர் திருக்கோயிலில் சித்திரைத்திங்கள் பெருவிழா 13—4—78 வியாழக் கிழமை முதல் தொடங்கி நடைபெற்றன. 24 4—78 அன்று ஏழு ஊர்வலம் வருதல் ஆகிய சப்தஸ்தானத் திருவிழா நடைபெற்றது. சமய விரிவுரைகள் அறிஞர்களால் நிகழ்த்தப்பெற்றன.

**திருக்கடவூரில் :**

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மை உடனுகிய ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கள் பெருவிழா 13—4—78 வியாழக்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. 18-4—78 ல் காலசம்காரத் திருநாள் அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளிக் காலசம்காரக் காட்சியைத் தரிசித்து அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினுர்கள். விழாநாட்களில் அறிஞர்களால் சமயவிரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. 17—4—78 அன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் நடைபெற்றன. யானை மேல் திருமுறைகளின் திருவீதியுலா பண்ணிசைவாணர்களின் திரு முறைப் பாராயணத்தோடு நடைபெற்றது. தேவாரவகுப்பு மாணவர் களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

**திருப்பனந்தாளில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ பெரியநாயகியம்மை உடனுகிய ஸ்ரீ அருணஜடே சுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைப்பெருவிழா 13—4—78 முதல் தொடங்கி சிறப்பாக நடைபெற்றது. திருவிழாநாட்களில் பட்டிமண்டபம், சமய விரிவுரைகள் ஆகியன அறிஞர்களால் நிகழ்த் தப்பட்டன. 19—4—78 திருக்கல்யாணத் திருநாளன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளித் தரிசித்து அன்பர் களுக்குத் திருவருட்பிரசாதம் வழங்கியருளினுர்கள்.

## ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் சிறப்பு வழிபாடு

சீகாழி மலைக்கோயிலின் உச்சியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ முத்துச் சட்டைநாதருக்கு 28—4—78 வெள்ளிக்கிழமை அன்று சிறப்பு வழிபாடு நடைபெற்றது. ஸ்ரீ முத்துச்சட்டைநாதருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் இரவு ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் புறப்பாடும் விசேஷ நாதஸ்வர இன்னிசையுடன் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் புறப்பாட்டின்போது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி மலைக்கோயிலில் ஸ்ரீ சட்டைநாதருக்கு நடைபெறும் புழுகாப்பு தரிசனம் செய்து அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசி அருளினார்கள். மாலையில் பேராசிரியர் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., அவர்கள் " ஆபதுத்தாரணர்மாலை " என்ற பொருள்பற்றி விரிவுரை ஆற்றினர்கள். அன்பர்கள் பலர் வழிபாட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்,

## சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

**நாயன்மார்கள் குருபூஜை விழாக்கள் :**

திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், மங்கையர்க்கரசியார், விறண்மிண்டர் ஆகிய நாயன்மார்கள் குருபூஜைகள் முறையே 2—5—78, 7—5—78, 9—5—78, 11—5—78 தேதிகளிலும், ஞானசம்பந்தர், முருகநாயனுர், திருநீலநக்கநாயனுர், திருநீலகண்டயாழ்ப்பாணர் ஆகிய நாயன்மார்கள் குருபூஜைகள் 24—5—78 தேதியிலும் நிலைய பூஜைமடத்தில் நடைபெற்றது. திரு. V. N. ஆறுமுக முதலியார் அவர்கள் பெரியபுராணம்வாசித்து விளக்கம் செய்தார்கள். அன்பர்கள் கேட்டுப் பயனடைந்தனர். எல்லோருக்கும் பிரசாதம்வழங்கப்பட்டது.

**கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா :**

9—5—78 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு நிலையமன்றத்தில் வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு ஸ்ரீ வடபழனிஆண்டவர் தேவஸ்தானம் நிர்வாக அதிகாரி திரு. N. R. லிங்கமராஜா அவர்கள் தலைமைவகித்தார்கள். ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு புலவர் திரு. N. இராமலிங்கம் அவர்களும், திரு. N. இராமமூர்த்திஐயர் அவர்களும் வேளூர்ப் பதிகங்களையும் முருகன் நாமாவளிகளையும் பாடினுர்கள்.

விழாத்தலைவர் திரு. லிங்கமராஜா அவர்கள் "சென்னைமக்களுக்கு வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் மாதாமாதம் கிடைப்பது பெரும்பாக்கியமாகும். திருமுருகன் வாரிவழங்கும் வள்ளலாகத்

திகழ்கின்றார். ஆதலால்தான் மக்கள் பெருந்திரளாகத் திருக்கோயிலுக்குச் சென்று திருமுருகனை வணங்குகின்றார்கள். திருமுருகன் இனிமையானவன். எல்லார் உள்ளத்திலும் நீக்கமற அமர்ந்திருப்பவன். அவனை நினைத்தால் நம் நிலை உயர்ந்து நன்மை ஏற்படும். இவ்வுலக வாழ்க்கையே நிலையற்றது. இந்நிலையற்ற தன்மையை உணர்த்தக்கூடியவன் எம்பெருமான் ஒருவனே. தருமையாதீனத்தின் திருக்கோயில்கள் தூய்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அங்கே மக்கள் ஈசனை வணங்கி நற்பயனைப் பெறுகிறார்கள். அதற்கு நாம் எல்லோரும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொற்பாதங்களைவணங்கிப் போற்றுவோமாக" என்று தம் தலைமையுரையில் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

**மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு :**

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் சமயப்பிரசார வழிபாடு 28—6—78 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பகல் 1 மணி வரை சென்னை அரும்பாக்கத்திற்கு அடுத்துள்ள கோயம்பேடு ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத ஸ்ரீ குசலவபுரீசுவரர் ஆலயத்தில் நடைபெற்றது. சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டன. வழிபாட்டின்போது திரு. N. இராமமூர்த்தி அய்யரும் குமாரி. R. கௌரியும் திருமுறைப் பாராயணம் செய்தனர். வழிபாட்டிற்குப்பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில்பேசிய திரு. . சிவஞானம் செட்டியார் அவர்கள் கூட்டு வழிபாட்டின் அடிப்படையை விரிவாக எடுத்துச்சொல்லி, தருமையாதீனத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டு மாதந்தோறும் நடந்துவரும் இவ்வழிபாட்டில் மக்கள் கலந்துகொண்டு இறையருள்பெற்று உய்ய வேண்டும் என்று கூறினார்கள். அடுத்துப்பேசிய திரு. வ. க. கிருஷ்ணன் அவர்கள் மிகப் பழமைவாய்ந்த இந்தக்கோயில் சுமார் ஆயிரம் ஆண்டுகளாகச் சிறப்புற்றிருக்கலாம். சுமார் 800 ஆண்டுகளுக்குமுன் இக்கோயில் சற்றுப் புதுப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். எம்பெருமான் உண்மையாக வணங்கும் பக்தர்கள் உள்ளத்தில் என்றும் நீங்கா இடம்பெற்றுத் திகழ்கிறார் என்ற கருத்துக்களை விளக்கி மூர்த்தி நாயனாரை இறைவன் தடுத்தாட்கொண்ட வரலாற்றையும் எடுத்துச்சொன்னார்கள். பின்னர் எல்லோருக்கும் அவர்கள் நன்றி கூறியபின் கூட்டம் நிறைவுற்றது.

# எதிர்காலம்

ஜோதிஷம், திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( காளயுக்திஹு வைகாசிமீ 1௳ முதல் 31௳ முடிய )

( 15—5—1978 முதல் 14—6—1978 முடிய )

| | | | |
|---|---|---|---|
| கே | | | ல<br>கு. சூ<br>பு |
| | இராசி | | சு |
| | | | செ<br>சனி |
| – | | | ரா<br>சந் |

| | | | |
|---|---|---|---|
| கு<br>ரா | சனி | செ<br>சந் | |
| | அம்ஸம் | | |
| | | | சு |
| | ல | சூ | பு<br>சே |

ஸ்ரீ காளயுக்தி ஹு ஆனிமீ 1௳ குருவாரம் ஹஸ்த நக்ஷத்திரம் கௌலவ கரணம் கூடிய காலத்தில் உதயம் முதல் 1 நாழிகை 12 வினுடிக்கு மிதுன லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்க்ஷத்தை முன்னிட்டு ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசிச்ங்கிரமணமாக ஆனி மாதம் பிரவேசம் செய்தருளுகிருர். ஆனி மாதம் 8-ம் தேதி குருவாரம் உதயாதி 2 நாழிகை 20 விஞடிக்கு ஸ்ரீ சூரியபகவான் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிரவேசம் செய்கிருர். அந்தவாராதிபதி குருபகவான் மேஷாதிபதியாகிருர். சங்கிரமகால கிரகஸ்திதியின் பலனுவது லோகத்தில் சுபிட்சம் ஏற்படும். உலகில் எங்கும் நல்ல மழை பொழிந்து பூமி செழிக்கும். நாடுகளில் விவசாயத் துறையில் விவசாய ஆராய்ச்சி அறிஞர்கள் அரிய சேவையால் விவசாயிகள் நவீன சாகுபடிமுறை விளக்கம்பெற்றுச் செயல்படுவார்கள். பிரஜைகள் பயிர்களின் உற்பத்தி பெருக்கி நேர்வழியில் பொருள் ஈட்டி உய்வார்கள். ஆன்ருேர்களால் தேசப் பொருளாதாரத்துக்கான முஸ்தீப்பு தீவிரமாகி, தேசங்களில் ஆங்காங்கு தொழில் நிறுவனங்கள் ஏற்படுவதாகும். பிரஜைகள் தம் தொழில்வளம் பெருக்கிப் பொருளாதார மேன்மையுடன் வாழ்வார்கள்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவ புண்ணிய சீலர்களாக விளங்கிநின்ற ஞானகுருமகான்கள் சிஷ்யகோடிகளுக்கு உபதேசித்து வருகின்ற சிவ சமய நெறிமுறை சிவாச்சாரம் தழைத் தோங்கும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் தெய்வ ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றுவரும். ஈஸ்வர அனுக்கிரகத் தினால் லோக பிரஜைகள் சகல சம்பத்துக்களையும்பெற்று க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼**
( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தனச்செலாவணிகளில் நல்ல நிலைமையாக இருந்துவரும். மாணிக்கம் புஷ்பராகம் பதித்த பூஷண பிராப்தி உண்டாகும். சகோதரருக்குச் செல்வம் பெருகும். கட்டிடப் பிராப்தி வாகனப் பிராப்திகளில் நற்பலனை இருந்துவரும். நீர் இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி பலன் வந்துகொண்டிருக்கும். புத்திரனின் கல்வி கலைகளில் முன் னேற்றம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செய் தொழில்கள் செம்மையாக நடைபெற்றுவரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½**
( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்ப சுபிட்சம் நன்றாக இருந்துவரும். பணச்செலாவணி சரளமாக இருந்துவரும். வெள்ளைக்கல் பதித்த ஆபரணச் சேர்க்கையைத் தரும். வித்வத்துவம் கலைத்துறையில் முன்னேற்றம் காணும். சகோதரர் பெற்றோர்களுக்குச் சௌக்கிய பலன் தரும். புத்திரனுக்கு அந்தஸ்து மேலிடும். தாம் பத்திய வாழ்வில் அன்யோன்யம் நிலவும். செய்தொழிலில் அலுவல் கள் திறம்பட நடந்துவரும். சனி ஞாயிறு சுபமாகும்.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾**
( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தி யில் நல்ல பணச் செலாவணியை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். சகோதரரின் விசுவாசம் ஒற்றுமை பலம் இருந்துவரும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்தி பலன் ஏற்படும். 12-ம் தேதிக்கு மேல் வித்துவத்துவம் கலைத்துறையில் நற்பயனைக் கொடுக்கும்.

புத்திரர்களின் கல்வி கலைகளில் முன்னேற்றம் தரும். தாம்பத்திய வாழ்க்கையில் சுமுகம் நிலவும். செய்தொழிலில் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.**

( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடக ராசி 9 பாதங்களும் சுமார் பலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் தன வரவும் செலவும் சரி சமனாக இருந்துவரும். சகோதரர் நலன் சாதாரணமாக இருந்து வரும். வாகன சுகம் திருப்தி யளிக்கும். வியாபாரம் வைத்தியம் சித்திரக்கலையில் முதலீடு செய்யும் நிலைமை ஏற்படும். விவகாரங்களில் செலவுடன் அனுகூலம் ஏற்படும். விவசாயத்துறையில் செலவு ஏற்படினும் காரிய சாதனைகளை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களுக்குச் சௌக்கியம் தரும். செய்தொழி லில் அலுவல்கள் சுறுசுறுப்புடன் நடந்துவரும். அவ்வப்போது காரியங்கள் பூர்த்தியாக நிறைவேறும். புதன் வியாழன் சுபமாகும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼**

( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் மாதாரம்பம்முதல் தனதாயங்கள் வந்துகொண்டிருக்கும். 12 தேதிக்குமேல் சுபகாரிய செலவுகளை ஏற்படுத்தும். சகோதரர் பந்து அம்மான்களில் நலனில் சுப விசேஷாதிகளில் கௌரவச் செலவுகள் மிகும். வீடு வாகனாதிகளில் முதலீடுசெய்ய நேரும். புத்திரர் புத்திரிகளுக்கும் சௌக்கிய பலனைக் கொடுக்கும். தாம்பத்திய வாழ்வில் சுகம் தரும். செய்தொழிலில் அலுவல்கள் புத்தி சாதுரிய மாக நடந்துவரும். வெள்ளி சனி சுபமாகும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**

( டோ. பா. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் சுப பலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வெகுவாக வந்துகொண்டிருக்கும். சகோதரரின் மனஸ்தாபம் ஒருபுறம் இருப்பினும் நலமுடன் இருந்து வருவர். வீடு வாகன பிராப்தியில் நற்பலன் இருந்துவரும். புத்திரரின் கல்வி கலைத்தொழில் துறைகளில் செலவுடன் நற்பலனும் ஏற்படும். மனைவிக்கு உடல் நலம் பாதித்துக் குணமாகும். செய்தொழிலில் ஆதாயம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾**
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் நற்பலனாக நடக்கும். குடும்பத்திற்குப் பண வரவுகள் திருப்தியாக வந்துகொண்டிருக்கும். சகோதரருக்குப் பிரபலஸ்திதியை உண்டுபண்ணும். 12 ஆம் தேதிக்குமேல் பிதர்வழி சொத்தில் ஓர் நற்பலன் வந்துசேரும். வித்தியா வியாபாராதி கலைத் துறையில் முன்னேற்றம் ஏற்படும். 23உ க்குமேல் கட்டிடப்பிராப்தியில் நற்பலன் உண்டாகும். பூமியில் அபிவிருத்திபலன் ஏற்படும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழில் பிரபலமாக நடந்துவரும். புதன் வியாழன் சுபமாகும்.

**8. விருச்சிகம் :- விசாகம் ¼ அனுஷம் - கேட்டை.**
(தோ. - ந. நி. நு. நே. - நோ. யா. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுமார்பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் கண்யமாக வந்துகொண்டிருக்கும். சகோதரருக்குச் சௌக்கியம்தரும். மனைவி அல்லது பிதா சகோதரிவழி சொத்துகளிலிருந்து கணிசமாக பொருள் வந்துசேரும். ஓர் விவகாரம் ஏற்படும். புத்திரனுக்கு விபத்துவந்து தப்பும். தாம்பத்தியவாழ்க்கை சுமுகமாக நடந்துவரும். செய்தொழிலில் மனோவேகத்துக்கிடையே காரிய சாதனைகளை ஏற்படுத்தும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼**
(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுமார் பலன் தரும். குடும்பத்தில் தனநிலைமையில் முன்பிருந்த இருணங்கள் தீரும். கையில் பணப் புழக்கம் சரளமாக இருந்துவரும். சகோதரர் புத்திரர் சம்பந்தமாகக் கவலை ஒருபுறம் இருப்பினும் அவர்களுக்குப் படிப்படியான முன்னேற்றத்தையும் சௌகரியங்களையும் ஏற்படுத்தும். பந்து அம்மான்களின் அனுசரணைபலம் இருந்துவரும். தாயாரின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பிதாவின் உடல்நலம் பாதித்துக் குணமாகும். பூமி இயந்திரங்களில் அற்பபலனாக இருந்துவரும். 12 உ முதல் எல்லாக் காரியங்களிலும் சிலாக்கியபலன் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

**10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½**
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களுக்கும் தன வருமானங்கள் சீராக இருந்து வரும். சகோதரருக்கு மனக்குறை இருப்பினும் அவர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் மனோதைரியத்தினால் செம்மையாக நடந்துவரும். சத்துருஜெயம் ஏற்படும். 23 உ

யிலிருந்து புத்திரர் புத்திரிகளுக்குச் சௌக்கியத்தையும் மேன்மை ஸ்திதியையும் உண்டுபண்ணும். தாம்பத்திய வாழ்க்கையில் சுமுகம் ஏற்படும். ஜீவனோபாயத்தில் நன்மை ஏற்படும். வெள்ளி சனி சுபமாகும்.

**11. கும்பம் :– அவிட்டம் ½ – சதயம் பூரட்டாதி ¾**
**( கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )**

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனை நடக்கும். குடும்பத்தில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர்தொழிலில் மாறுதல் பிரச்சினை ஏற்படும். இலக்கினாதிபதியின் சஞ்சாரத்தால் திடீர்பயணங்கள் ஏற்படும். 12உ முதல் வித்தியா வியாபாராதிகளில் தற்பலனைக் கொடுக்கும். புத்திரன் நலன் நன்றாக இருந்துவரும். மனைவிக்கு உஷ்ண நலிவு ஏற்பட்டுக் குணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்யநலம்தரும். செய்தொழிலில் அலுவல்கள் அனுபவ சாத்தியத்தினால் நன்கு நடைபெறும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**12. மீனம் :– பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.**
**( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )**

மீனராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பத்தில் தனம் தானியம் விருத்திகரமாக இருந்துவரும். கருப்பு சிவப்புநிற வஸ்துக்களில் இலாபம் தரும். வீடு வாகனப் பிராப்தியில் அபிவிருத்தியாக இருந்துவரும். புத்திரனுக்குத் தொழில் துறையில் பிரபலத்தை ஏற்படுத்தும். மனைவிக்குச் சாதாரணமாக இருந்த உஷ்ணாதிக்க நலிவு நீங்கிச் சுகம் தரும். வியாஜ்ஜிய வழக்குகளில் ஜெயப்பிராப்தியாகும். செய்தொழிலில் அதிகவருமானங்களைக்கொடுக்கும். புதன் வியாழன் சுபமாகும்.

---

## குருமணியின் அருளாசிகளிலிருந்து திரட்டிய
## அருள் ஞானக் கொடை

ஒரு மரத்தின் கிளையை வெட்டினாலோ, தளிரைப்பறித்தாலோ, இலையைப்பறித்தாலோ மரத்தைவெட்டினாலோ மரம் அழிந்துவிடாது. மீண்டும் துளிர்க்கும் — தளிர்க்கும். பிரம்மாண்டமான அல்லது பெரியதொரு மரமாயிருந்தாலும் சிறிய செடியாயிருந்தாலும் அதன் வேரில் புழுவைத்துவிட்டால் பெரியதொரு மரமும் காய்ந்து சாய்ந்து விடும். எனவே இந்தநாட்டின் மனித இனத்தின் வேராக விளங்குகின்ற பெண்குலம் மறைவிலிருந்தே மாண்புமிக்க செயல்களையெல்லாம் செய்யவல்லது ; அடி நிலையாக. — இரா. செ.